பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 30 புதன்கிழமை 14.07.2021 கதிர் 251

### இது ரகசியம் அல்ல!

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவகாரம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியுள்ளது போலும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஒரு மாதக் காலக்கெடு விதித்து இலங்கையின் பேராயர் கர்தினால் மல்கம்

பக்கம்02 »

# ராஜபக்ஷ குடும்ப ஆட்சியால் முழு நாட்டுக்கே அச்சுறுத்தல்

## ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 14

ராஜபக்ஷ குடும்பத்தினரின் தீர்மானங்களினால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் தேசிய பொருளாதாரத்துக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டினார். 2



## தமிழரசுக் கட்சியின் யாழ். அலுவலகத்தில் அமிர்தலிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு



(இ.கலையமுதன்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மறைந்த தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 32ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ் மார்ட்டீன் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது மறைந்த தலைவர் 2

## மேலும் 41 பேர் பலி மொத்தச் சாவு 3,574

கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 41 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 18 பெண்களும், 23 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 574 ஆக அதிகரித்துள்ளது.

## மன்னாரில் கடற்படை கொத்தணி

யாழ்.பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். 2

## இலங்கையில் 1,404 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,404 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் 2

## கட்டாரிலிருந்து நாடு கடத்தப்பட்டவர் தனிமைப்படுத்தல் மையத்தில் கைது

### விடுதலைப்புலிகளை மறுசீரமைக்க உதவினார் என்ற குற்றச்சாட்டின் கீழ்

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை மறுசீரமைக்க உதவினார் என்ற குற்றச்சாட்டில் முள்ளியவளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் வைத்து 41 வயது நபர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 2

## பரீட்சைகளை ஒத்திவைப்பது குறித்து அடுத்த வாரம் முடிவு

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

ஒக்டோபர் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை ஒத்திவைப்பது குறித்த அடுத்த வாரம் தீர்மானிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் 2



## மீசாலையில் வாள்வெட்டு; வர்த்தகர் ஒருவர் படுகாயம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தென்மராட்சி, மீசாலைப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைச் சம்பவத்தில் வர்த்தகர் ஒருபவர் படுகாயம் அடைந்துள்ளார்.

மீசாலைக்கும் சாவகச்சேரிக்கும் இடைப்பட்ட ஐயா கடையடிப் பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் குறித்த வன்முறை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அந்தப் பகுதியில் அழகுசாதன வர்த்த நிலையம் நடத்தும் 35 வயதுடைய வர்த்தகர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் சாவகச்சேரி 2



## சட்டம் - ஒழுங்கை நடைமுறைப்படுத்தி வடக்கு மக்களுக்கு சேவையாற்றுவேன்

### புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திடசங்கற்பம்



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாணத்தில் சட்டம் – ஒழுங்கை முறையாக நடைமுறைப்படுத்தி மக்களுக்கு உரிய சேவையை வழங்குவேன் என்று வடக்கு மாகாண புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிகக்கார தெரிவித்தார்.

அத்தோடு யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் ஏற்கனவே கடமையாற்றியுள்ளமையால் வடக்கு மக்களின் மனங்களை நன்கறிவேன் 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ரஞ்சித்தும் கத்தோலிக்க ஆயர்கள் சிலரும் ஒரு கடிதம் எழுதியிருக்கின்றனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாகத் தாங்கள் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு நம்பகரமான பதில்களைத் தர வேண்டும், ஈஸ்டர் தாக்குதலுக்குப் பொறுப்பானவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் – ஆகிய இரண்டு கோரிக்கைகளையும் அடுத்த ஒரு மாதத்துக்குள் ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் அதற்கு எதிரான போராட்டத்துக்குத் தாங்கள் மாற்றுவழி வகைகளை நாட வேண்டியிருக்கும் என்று அவர்கள் எச்சரித்திருக்கின்றார்கள்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விடயத்தில் கோட்டா அரசு முறையாகச் செயற்படவில்லை என்ற அவர்களின் ஆதங்கம் – சீற்றம் – எரிச்சல் – எல்லாம் அந்தக் கடிதத்தில் பிரதிபலித்துள்ளன.

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையில் இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவுக்குக் குற்றவியல் கடப்பாடு இருப்பதாகத் தெரிவதால் அவருக்கு எதிராக கிரிமினல் விசாரணை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது. அந்த நடவடிக்கையை உடன் ஆரம்பிக்குமாறு தமது தற்போதைய கடிதத்தில் பேராயரும் மற்றும் சில ஆயர்களும், கத்தோலிக்க மதகுருமாரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி ஆணைக்குழு தனது பரிந்துரையில் வலியுறுத்தியுள்ள ஏனையோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் ஒற்றைக்காலில் நிற்கின்றனர்.

இது விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவரது அரசுக்கும் இடைவிடாது தொல்லை கொடுப்பது என்று உறுதியாக நிற்கின்றார் போலும் பேராயர்.

தொடரட்டும் போட்டி, எது வரைப் போகின்றது என்று பார்ப்போம்.

* * *

தமிழ் அரசியல்வாதி ஒருவருடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா தொலைபேசியில் பேசினார்.

மக்கள் எழுச்சிப் போராட்டங்களை நடத்த வேண்டிய சமயம் இது. கொவிட் தொற்றைக் காட்டி அரசும், பொலிஸும், பிற தரப்பினரும் ஒன்றும் செய்ய விடாது தடுக்கின்றனர் என்று ஆதங்கப்பட்டார் சஜித். நமது தமிழ் அரசியல்வாதி ஒரு நக்கல் சிரிப்புச் சிரித்தார்.

*"கொவிட் தொற்றை ஒட்டி கடும் கெடுபிடிக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில்தான் – போதிய முன்னறிவித்தலோடு – தடைகளைத் தகர்த்து – 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தை' நாங்கள் நடத்தினோம். பல்லாயிரம் தாண்டி லட்சம் என்று மக்கள் ஒன்று கூடினர். யாரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் போட்ட வழக்குகளையும் ஒவ்வொன்றாக உடைத்து வருகின்றோம்"* – என்றார் நம் தமிழ் அரசியல் வாதி.

அப்படியாக என்று வாயைப் பிளந்து கேட்பதைத் தவிர சஜித்துக்கு மார்க்கம் ஒன்றும் இருக்கவில்லை.

சரியோ, பிழையோ 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான எழுச்சிப் பேரணி' என்பது தமிழரின் வரலாற்று வெற்றி. மக்களின் எழுச்சிக்குக் கிடைத்த வெற்றி.

ஆனால், மக்களும் பல தலைவர்களும் அதன் எழுச்சியைக் கண்டு கடைசி நேரத்தில் தாமும் போய் ஒட்டிக் கொண்டனர் என்பதே உண்மை.

ஆரம்பத்தில் சில டசின் பேரோடு களத்தில் நின்ற – தடைகளைத் துணிச்சலுடன் தகர்த்து, எழுச்சிக்கு வழி செய்த – அரசியல் தலைமைகளைப் புறம் ஒதுக்கி, இவ்விடயத்தில் அனைத்து அரசியல் தலைமைகளையும் ஒன்றாகக் கையாள்கின்றவர்கள் போல பலரும் நடித்தமைதான் விசனத்துக்குரியது.

சஜித் தரப்புக்கு 'தில்' இருந்தால் 'கண்டியிலிருந்து கடவத்தை வரை எழுச்சிப் பேரணி' ஒன்றை நடத்திப் பார்க்கலாம் எனப் பரிந்துரைக்கின்றோம்.

* * *

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா குறித்து சில தினங்களுக்கு முன்னர் என் பத்தியில் வெளியான தகவல்கள் குறித்து நீண்ட பட்டோலை விளக்கக் கடிதம் ஒன்றை – தன்னிலை விளக்கம் ஒன்றை – அவர் தயாரித்து அனுப்பியிருக்கின்றார் என்று தகவல். 'காலைக்கதிர்' ஆசிரியருக்கு முகவரியிடப்பட்ட அந்தக் கடிதம், பிரதியிடப்படவர்களுக்கு மின்னஞ்சலில் போய் சேர்ந்து விட்டது. ஆனால் 'காலைக்கதிர்' அலுவலகத்துக்குத்தான் இன்னும் வந்து சேரவில்லை.

கிடைத்தால், அதில் சட்டப் பிரச்சினை ஏதும் இல்லை என்றால், அதனை முழுமையாகப் பிரசுரிப்போம். அது எங்கள் கடப்பாடு. பொறுப்பு. எனினும் தேவைப்பட்டால் எங்கள் குறிப்பும் விளக்கமும் சில சமயங்கள் பதிலுடன் சேர்ந்து வரலாம்.

அவர் பதிலுக்கு We are waiting...!

– மின்னல் –

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பரிசோதனையில் 248 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்.பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் 291 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் அனைவரும் 18 தொடக்கம் 23 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று தெரியவந்துள்ளது.

மன்னார் கடற்படை முகாமைச் சேர்ந்தவர்கள் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ள நிலையில் அவர்கள் அனைவரும் பயிற்சி நிலை கடற்படையினராக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

## மீசாலையில் வாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 77 ஆயிரத்து 510 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,328 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 47 ஆயிரத்து 569 ஆக அதிகரித்துள்ளது.

## பரீட்சைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஒன்பது மாகாணங்களின் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் அனைத்துத் தரப்பினருடனும் விரிவான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து பரீட்சைகள் குறித்து ஒரு முடிவு எட்டப்படும்.

நாட்டின் கொரோனா நிலைமையைக் கருத்தில்கொண்டு குறுகிய காலத்துக்குள் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட வேண்டுமா என்பது குறித்து கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்படும்.

விரிவான கலந்துரையாடலைத் தொடர்ந்து அடுத்த வாரம் ஒரு முடிவு அறிவிக்கப்படும்.

அனைத்து ஆசிரியர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி போடுவதை பத்து நாள்களில் முடிக்க முடியும் என்று நம்புகின்றோம். ஆகஸ்ட் தொடக்கத்தில் இருந்து பாடசாலைகளை மீண்டும் கட்டம் கட்டமாக ஆரம்பிக்க முடியும் – என்றார்.

## தமிழரசுக் கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)





அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை சூட்டப்பட்டதுடன் விளக்கேற்றி நினைவு கூரப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ராஜபக்ஷ குடும்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ராஜபக்ஷ குடும்ப அரசு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்கும் கொள்கையைக் கையாண்டு வருகின்றது.

கொழும்புத் துறைமுக நகர் திட்டத்தை உருவாக்கியதன் மூலமாக சீன நிறுவனத்துக்குப் பாரியளவிலான பலத்தையும் அதிகாரத்தையும் ராஜபக்ஷவினர் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

தற்போது திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் மற்றும் திருகோணமலை துறைமுகத்தை இந்தியத் தேவைகளுக்காகப் பெற்றுக்கொடுக்கும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், புதிதாக கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையம் மற்றும் அதனுடன் இணைந்த பகுதிகளை முழுமையாக அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் பொருளாதாரத்துக்கும் பாரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் அமைச்சரவைப் பத்திரமொன்றும் அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதாவது கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீதமான உரிமத்தை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்கும் உடன்படிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது. அதுமட்டுமல்லாது நாட்டின் எரிவாயு உற்பத்தியை முன்னெடுக்க சர்வதேச கேள்வி மனுக் கோரல் ஒன்றையும் ராஜபக்ஷவினர் விடுத்திருந்தனர்.

அரசில் பலருக்கும் தெரியாது மறைமுகமாக அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்படுகின்றது. பலர் ஏமாற்றப்பட்டு நிதி அமைச்சரின் தேவைக்கு அமைய இந்த அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு இருக்கையில் அமெரிக்கத் தலையீடுகளை கடுமையாக எதிர்த்துப் பிரசாரம் செய்த அமைச்சர்கள் இந்த அமைச்சரவையில் உள்ளனர். இந்த விடயத்தில் அவர்களின் நிலைப்பாடு என்ன என்பதைக் கூற வேண்டும்.

நாடாளுமன்றத்துக்கும் அமைச்சரைக்கும் அறிவிக்காது நாட்டின் தேசிய வளங்களை ராஜபக்ஷவினர் தமது சொத்தாக நினைத்து விற்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் – என்றார்.

## சட்டம் - ஒழுங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)





என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிக்கார, வடக்கு மாகாணத்தில் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.

காங்கேசன்துறையிலுள்ள வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு கடமைப் பொறுப்பேற்கு நிகழ்வு இடம்பெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நான் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள இந்த வேளையில் கொரோனா நோய்த்தொற்று பரவல் காலப்பகுதியாக அமைந்துள்ளது.

அதனால் மக்களின் தேவைகளை அறிந்து உரிந்த சேவையை வழங்க என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன்.

வடக்கு மாகாணம் எனக்குப் புதியது இல்லை. காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் பிராந்தியங்களில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகவும் மன்னார் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் முன்னர் கடமையாற்றியுள்ளேன்.

அதனால் வடக்கு மக்களின் மனங்களை நன்கறிந்த நான் சட்டம் – ஒழுங்கை உரிய வகையில் நடைமுறைப்படுத்தி மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன் – என்றார்.

## கட்டாரிலிருந்து நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
திருகோணமலையைச் சேர்ந்த சந்தேக நபர் 2019ஆம் ஆண்டு கட்டாருக்கு தப்பிச் சென்றுள்ளார். அவருக்கு எதிராக சர்வதேச பொலிஸாரின் நீல நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

சந்தேகநபர் கட்டார் நாட்டில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். அவர் முள்ளியவளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் சந்தேகநபருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவரை தடுப்புக் காவலில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் எடுப்பார்கள் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# பொலிஸார் ஒருபோதும் தம்மிஷ்டப்படி சட்டத்தை மீறிச் செயற்படவே இல்லை

## சரத் வீரசேகர வக்காலத்து




பொலிஸார் ஒருபோதும் அவர்கள் விரும்பியபடி சட்டத்தை மீறி தன்னிச்சையாக செயல்படவில்லை என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கடுவலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவின் பேரிலேயே பொலிஸார் செயற்பட்டனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ்இ சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உத்தரவுகளை பிறப்பிக்க முடியும். நோய்ப் பரவல் காரணமாக அனைத்து போராட்டங்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அவர் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அன்று காலை போராட்டக்காரர்களிடம் சொன்னோம். நாங்கள் பதாகைகளை வைத்தோம். ஒலிபெருக்கி மூலம் வர வேண்டாம் என்று கூறினோம். இது போன்ற ஒரு உத்தரவு இருப்பதாக கூறினோம்.

அதையெல்லாம் கேட்காமல், தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களை மீறி போராட்டத்தில் பங்கேற்ற னர். பொலிஸார் அவர்களை இதன்போதுதான் கைது செய்தனர்.

பொலிஸார் விரும்பியதால் அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்படவில்லை. இவர்கள் உடனடியாக தனிமைப்படுத்தப்பட வேண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் அனுப்பப்பட்ட எழுத்து மூல ஆவணம் எங்களிடம் உள்ளது.

அதைத்தான் நாங்கள் செய்தோம். எனவே, அதற்காக யாரும் பொலிஸாரை குறை கூற முடியாது.' – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மன்னார் மீனவர்களுக்கு தடுப்பூசி ஏற்றத் தீர்மானம்

மன்னார், ஜுலை 14

இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ள பைஸர் தடுப்பூசிகளை மாற்றுத் தடுப்பூசியாக பயன்படுத்த ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதனைக் கைவிட்டு, மன்னார் மீனவர்களுக்கும், வெளிநாடுகளுக்கு கற்கைகளுக்காக செல்லும் மாணவர்களுக்கும் ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கொவிட் கட்டுப்பாட்டு செயலணியின் பிரதானியும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இலங்கையில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா முதலாம் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டவர்களுக்கு இரண்டாம் தடுப்பூசியாக மாற்றுத் தடுப்பூசி ஏற்றுவது தொடர்பாக ஆராயப்பட்ட வேளையில் தற்போது அமெரிக்கா வழங்கியுள்ள பைஸர் தடுப்பூசியை ஏற்றவே தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் தற்போது அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டுள்ளது.

ஏனெனில் இம்மாதம் மூன்றாம் வாரத்தில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் எமக் குக் கிடைக்கவுள்ளன.

எனவே அதனைப் பயன்படுத்த முடியும் என்பதால் தற்போது எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பைஸர் தடுப்பூசிகளை வடக்கு மீனவர்களுக்கும் அதேபோல் வெளிநாடுகளுக்கு கற்கைகளுக்காகச் செல்லவுள்ள மாணவர்களுக்கும் ஏற்றுவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக டெல்டா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலையொன்று காணப்படுகின்ற நிலையில் இந்தியாவே அதிக அச்சுறுத்தல் நாடாகக் காணப்படுகின்றது.

எனவே எமது வடக்கு மீனவர்கள் இந்திய எல்லைப்பகுதிகளுக்கு செல்வதும் இந்திய மீனவர்களுடன் தொடர்புகளைப் பேணுகின்ற காரணத்தால் அவர்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. எனவே முதலில் மன்னார் மீனவர்களுக்கு பைஸர் தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

## புலமைப்பரிசில் மற்றும் உயர்தர பரீட்சைகளை ஒத்திவைக்குக


### சஜித் கோரிக்கை



கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றை ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் முழுமையாக மூடப்பட்டுள்ளமையால் மாணவர்கள் குழப்ப நிலையில் காணப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



## சந்தேகத்திற்கு இடமான நாட்டுப்படகு மன்னாரில் கரையொதுங்கியுள்ளது

மன்னார் – சௌத்பார் கடற்கரையில் சந்தேகத்திற்கு இடமான நாட்டுப் படகொன்று கரையொதுங்கியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கரையொதுங்கிய இந்த படகு, இந்தியர்களுடையதாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் குறித்த படகில் பதிவு இலக்கம், உரிமையாளர் பெயர் என எதுவுமே பொறிக்கப்படவில்லை எனவும் சிறிய உடைவுகளுடன் காணப்படுவதாகவும் எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த படகு அதீத காற்று காரணமாக கரையொதுங்கியுள்ளதா? அல்லது சட்டவிரோத கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டு கைவிடப்படுள்ளதா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட் டெல்டா பிறழ்வு தொற்றாளர்கள் அதிகரிப்பு

நாட்டில் டெல்டா கொரோனாப் பிறழ்வு தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய 24 நோயாளர்கள் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், நாட்டில் டெல்டா கொரோனா வைரஸ் பிறழ்வு பரவியுள்ளமை தொடர்பில் ஆராய்வதற்காக மற்றுமொரு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட கொரோனா நோயாளிகளின் 96 உயிரி மாதிரிகளைக் கொண்டு இந்த ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நீர்ப்பீடனம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இந்த மாதிரிகள் எழுமாறாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆய்வுகளின் முடிவுகளை இன்னும் ஒரு வாரத்தில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தடுப்பூசி பெற்றவர்களுக்கு விரைவில் டிஜிற்றல் அட்டை

*தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட இலங்கையர்களுக்கு விரைவில் 'டிஜிட்டல் தடுப்பூசி அட்டை' வழங்கப்படவுள்ளது.*

*இதற்குரிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

## தனிமைப்படுத்தல் மீறல் மேலும் 224 பேர் கைது

கொழும்பு, ஜுலை 14

**நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் மேலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**இதற்கமைய தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 224 பேர் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.**

**இதேவேளை, தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 49 ஆயிரத்து 643 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

## முகக்கவசம் அணியாதவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை

### அஜித் றோஹண எச்சரிக்கை



கொழும்பு, ஜுலை 14

அங்காடிகள் உள்ளிட்ட பொது இடங்களில் முகக்கவசம் அணியாதவர்களை கைது செய்வதற்காக விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சிவில் மற்றும் சீருடையுடன் பொலிஸார் தீவிரமாக கண்காணித்து தனிமைப்படுத்தலை மீறுபவர்களைக் கைது செய்வார்கள் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

ஓரளவு தளர்த்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளில் மேல்மாகாணத்தில் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது பலர் முகக்கவசம் அணியாது இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இவ்வாறு முகக்கவசங்களை அணியாதவர்களைக் கைது செய்ய விசேட நடவடிக்கைகள் நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே கொவிட் வைரஸ் அச்சுறுத்தல்கள் தொடர்பாக மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும். தளர்வுகளின் போது சுகாதார விதிமுறைகளை மீறும் போது தொற்று தீவிரமடையும் ஆபத்துள்ளது. எனவே மக்கள் நாட்டிலுள்ள சுகாதார நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என பொலிஸ் பேச்சாளர் மேலும் கேட்டுக்கொண்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வவுனியாவில் தனிப் பல்கலைக்கழகம்

எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகம் தனியான பல்கலைக் கழகமாகத் தரம் உயருகின்றது

நல்ல விடயம்தான். ஆனால் சிந்திக்க வேண்டிய – மதி நுட்பத்துடன் ஆராய வேண்டிய – விவகாரம் இது.

முன்னரும் ஒரு தடவை இது தொடர்பில் இந்தப் பத்தியில் எச்சரிக்கை விடுத்திருந்தோம்.

வவுனியாவை – ஏன் வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த – அரசியல்வாதிகள் முன்னின்று இந்த முயற்சியை முன்நகர்த்தினர். அவர்களின் ஆசைப்படி வன்னிக்கு ஒரு தனிப் பல்கலைக் கழகம் கிடைத்து விட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வவுனியா முதல்வராக இருந்த – இருக்கின்ற – கலாநிதி த.மங்களேஸ்வரன் அந்த வாளாகத்தைத் தனிப் பல்கலைக்கழகமாக்கும் முயற்சியில் முன்நின்றவர். அந்த அதீத முயற்சிக்குக் கைமேல் பலன் அவருக்குக் கிடைத்து விட்டது.

புதிதாக உருவாகும் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் என்ற சிறப்புக்குரியவராக அவர் மாறியிருக்கின்றார். அதற்கும் பாராட்டுகள், வாழ்த்துகள்.

இப்படி கல்வித் துறையில் பல தரம் உயர்த்தல்களை நாம் கண்டுள்ளோம். கடந்து வந்துள்ளோம்.

நமது பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாகத் தரம் உயர்த்துதல் என்ற பெயரில் நடக்கும் திருக்கூத்து நாம் அறிந்ததே.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் பாடசாலைக் கல்வி நிர்வாக அதிகாரம் மாகாணங்களுக்குப் பகிரப்பட்டது. மாகாண நிர்வாகத்திடம் இருந்து கல்வித் துறையை மத்திய அரசு பிடுங்கி எடுக்கும் திட்டம்தான் 'இந்தத் தேசியப் பாடசாலைகளாகத் தரம் உயர்த்தும் நாடகம்' என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அதை முழுமையாக அறிந்து கொண்டுதான் அந்தந்தப் பிரதேச அரசியல்வாதிகள் மற்றும் பிரமுகர்களின் சதி வலையில் சிக்கி நமது தமிழ்ச் சமூகம் பகிரப்பட்ட பாடசாலைக் கல்வி நிர்வாகம் என்ற அதிகாரத்தைத் தேசியப் பாடசாலைகளாக்கும் பெயரில் மத்திய அரசிடம் தாரை வார்த்துக் கொண்டிருக்கின்றது.

வவுனியா வளாகத்தைத் தனிப் பல்கலைக்கழகமாக்கும் இந்த நடவடிக்கையும் அத்தகைய சதி வலைத் திட்டங்களில் சிக்கிய ஒரு செயற்பாடா என்பதை காலம்தான் தீர்மானிக்கும், பதில் சொல்லும்.

சரியோ, பிழையோ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழர் பிரதேசத்துக்கான ஒரு பல்கலைக்கழகமாகத்தான் எழுபதுகளின் நடுப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டது. இன்று நிலைமை என்ன?

மாணவர்களின் பெரும் பகுதியினர் சிங்களவர்கள். கலைப் பீடத்தில் விரிவுரைகள் தமிழில் நடப்பதனால் இன்னும் தமிழருக்கான பல்கலைக்கழகம் என்ற முகமூடியை யாழ்.பல்கலைக் கழகம் காட்டிக் கொண்டு இருக்க முடிகின்றது. ஆனால் இந்த நிலைமை நீண்ட காலத்துக்கு நீடிக்காது, தாக்குப் பிடிக்காது என்றே சமூக ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

இது இனவாத நோக்கில் முன்வைக்கப்படும் கருத்தல்ல. தமிழர் தாயகத்தில் அவர்களின் தனித்துவத்தை பறைசாற்ற எழுந்ததாக நாம் கூறிக் கொள்ளும் யாழ்.பல்கலைக்கழகம் மெல்ல மெல்ல சிங்களமயமாகிக் கொண்டிருக்கின்றது. எங்கள் கைகளை மீறி பெரும்பான்மையினரின் ஆக்கிரமிப்பு உயர்கல்வியின் பெயரால் கட்டவிழ்கின்றது. அதைத் தடுக்கவோ, மறிக்கவோ எமது தரப்பில் நியாயமும் இல்லை; மார்க்கமும் இல்லை; வழி வகையும் இல்லை.

ஆனால், அப்படி மாணவர்கள் எண்ணிக்கை இதே விதத்தில் அதிகரித்தாலும் கூட யாழ்ப்பாணம் வலிமையான தமிழர் தாயகம் என்ற முறையில் அதன் புவியியல் கட்டமைப்பு உடனடியாக பெரிய மாற்றத்துக்கு உள்ளாகி விடப் போவதில்லை.

ஆனால் வவுனியா நிலைமை அதுவல்ல. அநுராதபுரத்தில் இருந்த நமது எல்லை, மெல்ல மெல்ல மதவாச்சி, வவுனியா தெற்கையும் கடந்து வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் வவுனியா வளாகத்தை யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து பிரித்துத் தனிப் பல்கலைக்கழகமாக மாற்றும் – தமிழ் அரசியல் தலைவர்களின் முழுப் பங்களிப்போடு முன்னெடுக்கப்பட்டு, வெற்றிகரமாக நகர்ந்துள்ள – இந்தத் திட்டத்தை நோக்க வேண்டியிருக்கின்றது.

இன்று முதலாவது துணைவேந்தர் தமிழர்தான். அது மகிழ்ச்சிக்குரியது. நிலைமை அப்படியே தொடருமா என்பதுதான் கேள்வி.

யாழ்.பல்கலைக்கழகம் போல – நாட்டின் இன விகிதாசாரப்படி வவுனியா பல்கலைக்கழகத்திலும் தமிழ் மாணவர்கள் எண்ணிக்கை பன்னிரண்டு வீதமாகக் குறைந்தால் – குறைக்கப்பட்டால் – எமது தமிழர் தாயகத்தின் பிரதேச எல்லை மேலும் வடக்கு நோக்கி நகர்ந்து மாங்குளத்தில் வந்து நிற்கும்.

வவுனியாவைத் தனிப் பல்கலைக்கழமாக்கிய நமது அறிவு சார், அரசியல்சார் மேதாவிகளின் தீர்க்கதரிசனம் அப்போது தான் கணிப்பிடப்படும். அதுவரை பொறுத்திருப்போம்.

இப்போது தனிப் பல்கலைக்கழக மாற்றத்துக்கு உரிமை கோரி பெருமை கொள்ளும் பலர் அப்போது துண்டைக் காணோம், துணியைக் காணோம் என விலகி ஓடியிருப்பர்.

# தொற்றாளர்கள் மீள்வதற்கு முன் தடுப்பூசியைப் பெறுதல் வேண்டாம்

## ஹேமந்த ஹேரத் அறிவுறுத்து




கொவிட் வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள், தொற்றுநோயிலிருந்து மீள்வதற்கு முன்னர் கொவிட் தடுப்பூசியைப் பெற வேண்டாம் என்று சுகாதார அதிகாரிகள் மக்களை வலியுறுத்தியுள்ளனர்.

செய்தி மாநாடு ஒன்றில் உரையாற்றிய சுகாதார சேவைகளின் துணை பணிப்பாளர் ஹேமந்த ஹேரத், சிலர் நோய்த்தொற்றுக்கு மத்தியில் தடுப்பூசி பெற முனைகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒருவர், தடுப்பூசி போட்டால் அதில் பயனில்லை. எனவே, தொற்றிலிருந்து குணமடைந்த இரண்டு வாரங்களுக்குப் பிறகு தடுப்பூசி போடப் பரிந்துரைக்கப்படுகிறது என்று அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில், கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டபோதிலும் இலங்கை ஆபத்திலிருந்து வெளியில் வரவில்லை என்று அவர் கூறியுள்ளார். பல மாத கால ஊரடங்கு உத்தரவுகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் நாடு செல்ல முடியாது.

எனவே, நாட்டில் மற்றொரு அலையைத் தடுக்க சுகாதார வழிகாட்டுதல்களையும், நடைமுறைகளையும் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு பொதுமக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பா? மட்டக்களப்பு நிலாந்தனிடம் விசாரணை

''தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பா? முன்னாள் அரசியல் துறை பொறுப்பாளர் தயாமோகனுடன் தொடர்பா?, பற்றிநாதம், மீனகம் இணையத்தளங்களை நீங்கள் நடத்துகிறீர்களா?" என மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர் நிலாந்தனிடம் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவு அதிகாரிகள் துருவித் துருவி விசாரணை நடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணை பிரிவுக்கு கடந்த திங்கட்கிழமை காலை அழைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளரும், சுயாதீன ஊடகவியலாளருமான செ.நிலாந்தனிடம் சுமார் மூன்று மணிநேரம் விசாரணை நடைபெற்று வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த விசாரணையில் ஊடகவியலாளரிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டதோடு, ஊடகவியலாளரின் முகநூல் கணக்கு, மின்னஞ்சல் கணக்கு, வங்கிக் கணக்கு, வட்ஸ் அப் கணக்கு உள்ளிட்ட பல விவரங்களைப் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணை பிரிவு அதிகாரிகள் பெற்றுக்கொண்டமையுடன், பாஸ்போட்டையும் தருமாறு கோரியுள்ளனர்.

அத்தோடு "தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உங்களுக்குத் தொடர்பு இருக்கிறதா? தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் நீங்கள் அங்கத்தவராக இருந்தீர்களா? உங்களது உறவினர்கள் யாரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்தார்களா? நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்துள்ளீர்களா? நீங்கள் எத்தனை வருடங்களாக ஊடகவியலாளராக உள்ளீர்கள்? எந்த எந்த ஊடகங்களுக்கு பணியாற்றுகின்றீர்கள்? தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் துறை பொறுப்பாளர் தயாமோகனுடன் தொடர்பில் இருக்கின்றீர்களா? பற்றிநாதம், மீனகம் இணையத்தளங்களை நீங்களா நடத்துகின்றீர்கள்? நீங்கள் தொண்டு நிறுவனம் வைத்துள்ளீர்களா? உங்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான இணையத்துக்கும் தொடர்பு உள்ளதா? உங்களுக்கு வெளிநாட்டிலிருந்து பணம் வருகிறதா? எந்த எந்த நாட்டிலிருந்து பணம் வருகிறது? யார் யார்? பணம் அனுப்பினார்கள்? எந்த எந்த ஊடக அமைப்புகளில் அங்கத்தவராக உள்ளீர்கள்?" என பல கேள்விகளை கேட்டுத் துருவித் துருவி விசாரணை நடத்தியுள்ளனர்.

அத்துடன் அதற்கான பதில்களை வாக்குமூலமாகப் பதிவு செய்து பல இடங்களில் கையொப்பங்களைப் பெற்றுக் கொண்டனர் என ஊடகவியலாளர் நிலாந்தன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

# பிறந்த சிசுவை கொலை செய்து எரித்த கொடூரம்; தாய் கைது

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பிறந்த சிசு ஒன்றைக் கொலை செய்து எரித்த குற்றச்சாட்டின் பேரில் சிசுவின் தாயாரை கடந்த திங்கட்கிழமை மாலை கந்தளாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மத்ரஸா நகர் பேராறு கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த பெண்ணின் கணவர் வெளிநாடு சென்றுள்ளார் எனவும் கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வேறு ஒரு நபருடன் உள்ள தகாத உறவு மூலம் சிசு பிறந்துள்ளதாகவும், பிறந்த சிசுவை கொலை செய்து எரித்துள்ள நிலையில் அதனை தெரு நாய்கள் கவ்விச் சென்ற நிலையில் அயலவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து பொலிஸார் சிசுவினை பிரசவித்த பெண்ணைக் கைது செய்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# எரிவாயு சிலிண்டர் விலை குறையும்?

உள்நாட்டு எரிவாயு நிறுவனங்களால் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய 18 எல் எரிவாயு சிலிண்டரின் விலையை குறைக்க நுகர்வோர் விவகார ஆணையம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, சிலிண்டர் ஒன்றின் விலை 1,150 ரூபாவுக்கு விற்கப்பட வேண்டும் என்று வர்த்தமானி அறிவிப்பை வெளியிட வர்த்தக அமைச்சு தயாராகி வருகிறது.

எரிவாயுவை கொள்வனவு செய்யும் நுகர்வோர் குறித்த சிலிண்டரை லீற்றரில் அளவிட முடியாது என்பதால் சிலிண்டரின் எடையை கிலோகிராமில் குறிப்பிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த எரிவாயு சிலிண்டரை சந்தைக்கு அறிமுகம் செய்தமை நுகர்வோருக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தியதுடன் சாதாரண உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களுக்கு சந்தையில் கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் 13

ந.வித்தியாதரன்

தமிழ் இளைஞர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்தில் பல போராளிகள் கைதாகினர். குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன், சிவபாதம் மாஸ்டர், டக்ளஸ் தேவானந்தா என்று அந்தப் பட்டியல் நீளும்.

அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது இயக்கங்களில் முக்கியமானவர்கள். ரெலோவின் செயலதிபராக இருந்தவர் தங்கத்துரை. அதன் மூளையாகச் செயற்பட்டவர் (எனினும், 'தினபதி'யில் வேலை செய்த நாள்களில் ரெலோ, புளொட், புலிகள் இயக்கம், ஈரோஸ் என்று வேறுபாடுகள் பற்றியோ, அப்படி பல்வேறு பெயர்களில் பல்வேறு இயக்கங்கள், அமைப்புகள் செயற்பட்டமை பற்றியோ எனக்கு அறிவோ, நினைவோ இருந்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. எல்லாம் 'பொடியன்கள்', 'இயக்கம்' என்ற அளவில்தான் இருபது வயது இளைஞனாக இருந்த எனக்குத் தெரிந்திருந்தன.)

இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் சிறையில் தடுப்புக் காவலில் சிக்கிக் கொண்டமையால் அந்தந்த அமைப்புகள் நெருக்கடிகளை எதிர்கொண்டன. கொள்ளையிட்டு இயக்கத்துக்காகச் சேர்த்த நிதி, ஆயுதங்கள் எங்கு சேமிக்கப்பட்டுக் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன என்பதை அறிந்த தலைவர்கள் சிறையில். அவர்களுடன் தொடர்பு எடுத்தால்தான் வெளியில் இருக்கும் மற்றைய போராளிகளுக்கு அவற்றைப் பெறவும், பயன்படுத்தவும் முடியும். இது போன்ற பல விடயங்களுக்காகத் தடுப்புக் காவலில் உள்ள கைதிகளுக்கும் வெளியில் இருக்கும் போராளிகளுக்கும் இடையில் ஊடாட்டம் அவசியப்பட்டது. வெளியில் இருக்கும் போராளிகள் இந்த ஊடாட்டத்துக்காக அந்தரப்பட்டனர். எந்தச் சமயத்திலும் சட்டத்தரணிகளை இதற்குப் பயன்படுத்த முடியாத நிலைமை இருந்தது. நவரத்தினம் (கரிகாலன்), கனக மனோகரன் போன்ற சட்டத்தரணிகள் போராளிகள் மீது பரிவு கொண்டிருந்தாலும் – அவர்கள் மீது போராளிகளுக்கு முழு நம்பிக்கை இருந்த போதிலும் – இடை ஊடாட்டத்துக்குப் பொருத்தமானவர்களாக அவர்கள் அமையவில்லை. சட்ட நிபுணத்துவத்துடன் தேவைப்பட்ட விடயங்களை வழங்கி உதவத் தயாராக இருந்த அவர்கள் 'போஸ்ட் பியோன்' போல தகவல் ஊடாட்டத்துக்கான எடுபிடிகளாகச் செயற்பட ஏனோ முன்வரவில்லை. அல்லது பொருந்தி வரவில்லை.

அப்போது வேலை நாள்களில் ஒவ்வொரு நாளும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிக்கும் விசேட மேல் நீதிமன்றத்தில், அங்கு கொண்டு வரப்படும் கைதிகளான தமிழ் இளைஞர்களுடன், வழக்கு இல்லாத நேரத்தில் அதிகம் ஊடாடி வரும் நான் அவர்கள் கண்ணில் பட்டேன்.

நான் சிங்கள நிறுவனம் நடத்தும் – தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கடுமையாக விமர்சிக்கும் – 'தினபதி', 'சிந்தாமணி'யில் பணியாற்றினாலும் அந்த இளம் வயதிலேயே தமிழ்த் தேசிய சிந்தனைப் போக்குடையவன், நம்பிக்கைக்குரியவன் என்ற படிமானங்களை சிவசிதம்பரம், கரிகாலன், சந்திரகாசன், சி.வி.விவேகானந்தன் போன்ற சட்டத்தரணிகள் மத்தியில் – ஏன், அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சம்பந்தன், குமார் பொன்னம்பலம் போன்ற அரசியல்வாதிகள் மத்தியிலும் – ஏற்படுத்தியிருந்தேன்.

அந்தச் சமயத்தில்தான் வெளியில் இருந்த போராளிகள் தரப்பின் செய்திகளுடன் இளைஞர்கள் சிலர் அவ்வப்போது, என்னுடன் தொடர்பு கொள்ள முயன்றனர். ஆரம்பத்தில் என்னைக் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டனர். நான் கொட்டாஞ்சேனையில் எனது வீட்டிலிருந்து அலுவலகத்துக்குப் புறப்படுவதற்காக பஸ் ஏறும் இடத்திலோ, நான் வழமையாக சாப்பிடப் போகும் முஸ்லிம் ஹோட்டலிலோ திடீர் திடீரென என்னை வழிமறித்து உரையாடினர்.

ஆரம்பத்தில் நான் அரச தரப்புக்குச் சொல்லி அவர்களைக் காட்டிக் கொடுத்து விடுவேனோ என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. மெல்ல, மெல்ல அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. அவர்கள் சொன்ன ஓரிரு தகவல்களை குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்றோருக்கு நான் 'பாஸ்' பண்ணினேன். கிடைத்த பதிலையும் தெரிவித்தேன்.

இந்த இரு தரப்புகளும் நெருங்கிய ஊடாட்டத்துக்கு என்னை அவர்கள் மிக 'ஸிரியஸாக' பயன்படுத்தத் தொடங்கிய போதுதான் எனக்கு இரண்டு விடயங்கள் விளங்கத் தொடங்கின.

ஒன்று – இது பேராபத்தை எனக்குத் தரக் கூடியது. வெளியில் இருந்தபடி ஊடாட்டத்துக்கு என்னைப் பயன்படுத்தும் ஒரு தரப்பு பொலிஸிடம் அல்லது புலனாய்வாளர்களிடம் சிக்கினால் என் கதை கந்தல்தான்.

அடுத்தது – நான் ஆற்றும் பத்திரிகைப் பணிக்கு இது நேர்மையான செயல் அல்ல. பத்திரிகையாளன் என்ற முறையில் எனக்குத் தரப்பட்ட சிறப்புரிமையை – விசேட நீதிமன்றத்துக்குள் கேட்டுக் கேள்வியில்லாமல் நுழைந்து பல தரப்புகளுடனும் கட்டுப்பாடின்றி ஊடாடும் வசதியை – நான் துஷ்பிரயோகம் செய்கின்றேன் என்ற புரிதலும் எனக்கு வந்தது.



இந்த படத்தை வரைந்தவர் ஓவியர் கௌசிகன். சாயி நிலையத்தில் சிறுவனாக இருந்த கௌசிகனை, 'தினபதி' உதவி ஆசிரியர் மாஸ்டர் சிவலிங்கம் எஸ்.டி.எஸ். ஐயாவிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைளில் அவருடைய ஓவியங்களை அறிமுகப்படுத்தி வைத்தார் ஐயா. அப்போது ஐயாவைப் பார்த்து கௌசிகன் நேரடியாக வரைந்த பென்சில் ஓவியம். இன்று கௌசிகன் உலகளவில் பிரசித்தி பெற்று, ஓவியக் கல்லூரி வைத்துள்ளார். கொழும்பு சாயி நிலையத்தில் இவருடைய கைவண்ணத்தில் சத்ய சாயி பாபா, சீரடி சாயி பாபா படங்களும், சிலைகளும் அமைந்துள்ளன.

அதேசமயம், நான் அதுவரை நடந்து கொண்ட முறை – என் பழக்கவழக்கம் அல்லது பண்பியல்பு – எல்லா இயக்கத்தவர்கள் மத்தியிலும் என்னைக் குறித்து ஒரு நல்ல மனப் பதிவை ஏற்படுத்தியது. ஒருவர் பற்றிய முதல் மனப் பதிவுதான் ஆழமாக நிலைத்திருக்கும் அல்லவா...!

அந்த வகையில் பல்வேறு இயக்கங்கள், தமிழ் அமைப்புகள் மத்தியில் நம்பிக்கைக்குரியவன், காட்டிக் கொடுக்காத பத்திரிகையாளன் என்ற மனப்பதிவை இது தந்தது என்பது உண்மைதான்.

ஆனாலும் அவர்களின் அந்த நம்பிக்கையே – என் குறித்து அவர்கள் மனதில் ஏற்படுத்திய பிம்பமே – எனக்கு நெருக்கடி தருவதாக மாறியது.

ஆரம்பத்தில், சொல்லாமல் கொள்ளாமல் திடீர் திடீர் எனத் தோன்றி, வழி மறித்துப் பேசிய தரப்புகள், நம்பிக்கை பிறந்தமையால் என்னைத் தேடி வரத் தொடங்கின. அலுவலகம், என் கொழும்பு வீடு, நான் சாப்பிடும் இடங்கள், நான் வந்து இறங்கும் பஸ் தரிப்பு நிலையங்களில் எல்லாம் எனக்காகக் காத்திருக்கும் நிலைமை கூட வந்தது.

நீதிமன்றுக்குக் கூட்டி வரப்படும் தமிழ்க் கைதிகள் கூட தினசரி நீதிமன்றுக்கு வந்ததும் கண்ணால் என்னைத் தேடுகின்றமையையும், தங்களுக்கு ஏதேனும் செய்தி, தகவல் என் மூலம் இருக்கின்றதா என்பதை அறிய ஆவல் காட்டுகின்றமையையும் கூட நான் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அப்படி நான் அப்போது இடையாளாக – தொடர்பாளராக – செயலாற்றிய பலர் இன்னும் உயிரோடு (பெரும்பாலும் வெளிநாடுகளில்) உள்ளனர்.

இந்த நிலைமை விபரீதக் கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதை நான் உணர்ந்தேன். விடயம் சிக்கினால் – உண்மை அம்பலமாகினால் – நானும் இந்தக் கைதிகளில் ஒருவனாக்கப்படுவேன் என்ற யதார்த்தம் என்னை நடுநடுங்க வைத்தது.

பேனாவால் எழுதும் துணிச்சல் இருந்த எனக்கு ஏதோ இந்த இரகசியத் தொடர்பாடலுக்கான 'போஸ்ட் பியோன்' ஆகப் பணியாற்றும் திராணி இருக்கவில்லை.

பிற்காலத்தில் புலிகள் – மஹிந்த, புலிகள் – ரணில் ஊடாட்டங்களுக்கான 'போஸ்ட் பியோன்' ஆக நான் பணியாற்றிய போது இப்படி 'பயங்கரவாதத் தடைச் சட்டம்' பாயும் ஆபத்து இருக்கவில்லை. அதனால் துணிச்சலுடன் ஈடுபட்டேன்.

ஆனால், அதன் விளைவு என் குடும்பத்தவர்களும் உறவினர்களுமாக நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில், வெள்ளைவானில் வந்தோரால் தாக்கப்பட்டு, மோசமாக நடத்தப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, பின்னால் கைகள் விலங்கிடப்பட்டு, தரதரவென்று இழுத்துச் செல்லப்பட்டு வானில் தூக்கிப் போடப்பட்டு, கடத்தியோர் தமது கால்களினால் வானுக்குள் போட்டு மிதித்திருக்க, எங்கோ ஓரிடத்துக்கு இழுத்துச் செல்லப்படும் நிலைமையை சந்திக்க வேண்டி வந்தது. இனந்தெரியாதோரால் 'உதயன்', 'சுடர்ஒளி' ஆசிரியர் கடத்தப்பட்டார் என்று அரச வானொலியும் கூட அறிவித்த நிலையில் உடைகள் களையப்பட்டு, சித்திரவதைகள் எதிர்கொள்ள வேண்டியவனானேன்.

ஆனாலும், இராஜதந்திர அழுத்தங்களினால் வெள்ளை வான் கடத்தல் சில மணித்தியாலங்களின் பின்னர், வீதியில் கண்கள் கட்டப்பட்டு, கைகள் பின்புறம் மடக்கி விலங்கிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட வித்தியாதரன் சட்ட ரீதியாகக் கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என மாற்றப்பட்டது.

அதன் பின்னர் பெரும் மனச் சிதைவையும் தரக் கூடிய தடுப்புக் காவலை இரண்டரை மாதங்கள் நான் சந்திக்க வேண்டியவனானேன்.

அந்தச் சமயத்தில் சில கட்டங்களில் உச்ச நெருக்கடிகளை – அடுத்த பிறப்புக்கான வாசலைத் தட்டும் நிலைமை வரை – நான் சென்றேனாயினும் எந்தச் சமயத்திலும் என் மனத் துணிச்சலை, திடசங்கற்பத்தை, என் உறுதியை நான் தளர விடவேயில்லை என்பதை நான் திடமாகக் கூறுவேன்.

அதற்குப் பின்னரும் கூட இதுபோன்ற உயிர் போகும் உச்ச நெருக்கடிகளை நான் சந்தித்திருக்கிறேன். ஆனால் நான் துவண்டு விடவில்லை.

அதற்குக் காரணம் இருந்தது. இருபத்தியைந்து வருடங்கள் இரண்டு பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்த பட்டறிவுத் துணிச்சல் என்னிடம் இருந்தது. மரணங்கள் மலிந்த யுத்த பூமியில் என் பத்திரிகைப் பணிக்கு மத்தியில் பல நூறு கோர உயிரிழப்புகளைக் கண்டு மரத்துப் போயிருந்தது எனது மனது. என் ஊடக சகபாடிகளுக்கு நடந்த கொடூரங்களைப் பார்த்து கனத்து விட்டிருந்த என் மனதுக்கு நான் சந்தித்த அந்தக் குரூரங்களும், சித்திரவதைகளும் ஒரு பொருட்டாகவேபடவில்லை. அது ஒரு நாள் எனக்கும் நேரலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அப்படி ஒரு நிலைமை வந்தால் அதனை எதிர்கொள்வதற்கு என்னை மட்டுமல்லாமல் என் குடும்பத்தைக் கூட தயார்படுத்தி இருந்தேன். நான் கடத்தப்படுவதற்கு முதல்நாள் அப்படி ஒரு சம்பவம் எனக்கு எந்நேரமும் நேரலாம் என நான் ஆங்கிலத்தில் ஒரு பேட்டியளித்துமிருந்தேன். என்னைக் கடத்தியதும் அந்த ஆஸ்திரேலிய செய்தியாளர் அதனைப் பரபரப்பான செய்தியாக ஆஸி தொலைக்காட்சி மூலமாக ஒளிபரப்பினார். அதைப் பார்த்தவர்களுக்கு அந்த துன்பியல் நிகழ்வை எதிர்கொள்ள நான் தயாராக இருந்தமை புலப்படும். நான் இழைக்காத குற்றத்துக்காக என் பேனா மண்டியிடாது என்ற துணிச்சல் – மனத்திடம் – என்னிடம் மிக உறுதியாக இருந்தது.

ஆனால், எண்பதுகளின் ஆரம்பத்தில் நீதிமன்றச் செய்தியாளனான என் மீது வரலாறு வல்வந்தமாகச் சுமத்திய அந்தப் பொறுப்பு நினைத்துப் பார்க்கவே அச்சம் தரும் தாங்கவே முடியாத சுமையாக என்னை அச்சுறுத்தியது.

நான் வேறு வழியின்றி எஸ்.டி.எஸ். ஐயாவிடம் சரணடைந்தேன். அவர் துணை ஆசிரியர் இரத்தினசிங்கத்தையும் அழைத்து தம் அறையில் வைத்து ஆலோசனை நடத்தினார். சட்டத்தரணிகள் சிவசிதம்பரத்துடனும், கரிகாலனுடனும் எனக்கு நம்பிக்கையானவர்கள் என்ற முறையில் கலந்தாலோசிக்கப் பணித்தார்.

அடுத்த நாள் காலையில் வந்ததும் என்னைத் தமது அறைக்கு அழைத்தார்.

இந்த விடயத்தை எப்படிக் கையாள்வது என்பது குறித்து ஒரு சின்ன விரிவுரை தந்தார்.

நான் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனேன். அவர் காட்டிய வழிப்படுத்தலில் எனக்கு வந்த சிக்கல் மூன்றாம் ஆளுக்குத் தெரியாமல் விலகியது.

அதன் முழு விவரம் நாளை...!

(வளரும்..)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021


தரம் - 8 | கணிதம் | அலகு 13, 14

## பின்னங்கள்

### பின்னங்கள் அறிமுகம்

01.ஓர் அலகை சமனான பகுதிகளாக பிரிக்கும் போது அவற்றுள் ஒரு பகுதி அல்லது சில பகுதிகள் ஒரு பின்னம் எனப்படும்.


$\frac{3}{4}$ ← தொகுதி எண் ← பகுதி எண்



1.முறைமைப்பின்னங்கள் $\frac{1}{3}$, ................, ..................., ................, ................., ...........

2.முறைமையில்லாப்பின்னங்கள் $\frac{9}{5}$, ................, ..................., ................, .........


சமவலுப் பின்னங்கள் $\frac{1}{2} = \frac{2}{4} = \frac{3}{6} = \frac{4}{8} = \frac{5}{10} = \frac{6}{12}$



02.எளிய பின்னங்கள்

$\frac{2}{3} = \frac{4}{6} = \frac{8}{12}$ (×2, ×2 / ÷2, ÷2)

கலப்பு எண்



$= 3\frac{3}{4}$

* கலப்பு எண்ணிலுள்ள முழு எண்ணை அதிலுள்ள முறைமைப் பின்னத்தின் பகுதியினால் பெருக்கி முறைமைப் பின்னத்தின் தொகுதியுடன் கூட்டுக.

* முறைமையில்லாப் பின்னத்தின் பகுதி கலப்பு எண்ணின் முறைமைப் பின்னத்தின் பகுதியே ஆகும்.

**1.முறைமையில்லாப்பின்னம் - கலப்புப்பின்னம்**

1. $\frac{6}{5} = 1\frac{1}{5}$
2. $\frac{7}{2}$ = ................
3. $\frac{9}{4}$ = ................
4. $\frac{11}{5}$ = ................
5. $\frac{14}{3}$ = ................
6. $\frac{13}{9}$ = ................
7. $\frac{16}{7}$ = ................
8. $\frac{19}{8}$ = ................
9. $\frac{23}{11}$ = ................
10. $\frac{15}{7}$ = ................
11. $\frac{23}{8}$ = ................
12. $\frac{19}{6}$ = ................

**2.கலப்புபின்னம் - முறைமையில்லாப்பின்னம்**

1. $1\frac{2}{3} = \frac{5}{3}$
2. $2\frac{2}{3}$ = ................
3. $2\frac{4}{6}$ = ................
4. $3\frac{8}{9}$ = ................
5. $1\frac{1}{6}$ = ................
6. $4\frac{1}{2}$ = ................
7. $5\frac{1}{8}$ = ................
8. $3\frac{1}{6}$ = ................
9. $3\frac{1}{3}$ = ................
10. $8\frac{2}{7}$ = ................
11. $7\frac{2}{3}$ = ................
12. $6\frac{1}{6}$ = ................

3.ஒரு பின்னத்தை முழு எண்ணால் பெருக்குதல்

1. $\frac{2}{3} \times 5 = \frac{10}{3}$
2. $\frac{4}{5} \times 3$ = ................
3. $\frac{2}{15} \times 7$ = ................
4. $\frac{1}{5} \times 4$ = ................
5. $\frac{4}{11} \times 2$ = ................
6. $\frac{3}{10} \times 9$ = ................
7. $\frac{12}{7} \times 6$ = ................
8. $\frac{7}{10} \times 3$ = ................
9. $\frac{13}{11} \times 1$ = ................
10. $\frac{11}{20} \times 3$ = ................
11. $\frac{2}{25} \times 5 = \frac{2}{5}$
12. $\frac{1}{12} \times 3$ = ................
13. $\frac{2}{21} \times 7$ = ................
14. $\frac{2}{3} \times 9$ = ................
15. $\frac{4}{99} \times 11$ = ................
16. $\frac{2}{3} \times 39$ = ................
17. $\frac{2}{7} \times 49$ = ................
18. $\frac{1}{25} \times 5$ = ................
19. $\frac{2}{7} \times 14$ = ................
20. $\frac{2}{9} \times 54$ = ................

4.ஒரு பின்னத்தை வேறொரு பின்னத்தால் பெருக்குதல்

1. $\frac{1}{2} \times \frac{1}{3} = \frac{1}{6}$
2. $\frac{3}{4} \times \frac{1}{2}$ = ................
3. $\frac{3}{5} \times \frac{3}{4}$ = ................
4. $\frac{7}{8} \times \frac{3}{5}$ = ................
5. $\frac{1}{2} \times \frac{1}{3}$ = ................
6. $\frac{9}{10} \times \frac{7}{6}$ = ................
7. $\frac{5}{8} \times \frac{5}{9}$ = ................
8. $\frac{7}{10} \times \frac{3}{4}$ = ................
9. $\frac{8}{13} \times \frac{6}{7}$ = ................
10. $\frac{12}{13} \times \frac{2}{7}$ = ................
11. $\frac{4}{6} \times \frac{3}{4} = \frac{1}{2}$
12. $\frac{7}{9} \times \frac{3}{14}$ = ................
13. $\frac{1}{2} \times \frac{2}{3}$ = ................
14. $\frac{9}{10} \times \frac{5}{9}$ = ................
15. $\frac{9}{16} \times \frac{8}{18}$ = ................
16. $\frac{6}{14} \times \frac{7}{9}$ = ................
17. $\frac{6}{7} \times \frac{14}{18}$ = ................
18. $\frac{2}{5} \times \frac{5}{2}$ = ................
19. $2\frac{1}{25} \times \frac{5}{7}$ = ................
10. $\frac{2}{14} \times \frac{7}{10}$ = ................

5.ஒரு பின்னத்தை கலப்பு எண்ணால் பெருக்குதல்

1. $1\frac{1}{2} \times \frac{1}{3} = \frac{3}{2} \times \frac{1}{3} = \frac{1}{2}$
2. $\frac{3}{4} \times 2\frac{1}{2}$ = ................
3. $3\frac{3}{5} \times \frac{3}{4}$ = ................
4. $\frac{7}{8} \times 4\frac{3}{5}$ = ................
5. $5\frac{1}{2} \times \frac{1}{3}$ = ................
6. $\frac{9}{10} \times 3\frac{7}{8}$ = ................
7. $2\frac{5}{8} \times \frac{5}{9}$ = ................
8. $\frac{7}{10} \times 2\frac{3}{4}$ = ................
9. $1\frac{8}{13} \times \frac{6}{7}$ = ................
10. $\frac{12}{13} \times 1\frac{2}{7}$ = ................
11. $1\frac{2}{3} \times 1\frac{9}{12}$ = ................
12. $2\frac{11}{13} \times 1\frac{1}{14}$ = ................
13. $1\frac{6}{7} \times 3\frac{7}{11}$ = ................
14. $2\frac{7}{20} \times 2\frac{3}{15}$ = ................
15. $\frac{19}{20} \times 3\frac{1}{25}$ = ................
16. $2\frac{2}{13} \times 1\frac{1}{7}$ = ................
17. $2\frac{4}{17} \times 3\frac{18}{19}$ = ................
18. $\frac{29}{20} \times 4\frac{15}{21}$ = ................
19. $1\frac{16}{17} \times 2\frac{1}{19} \times 3\frac{4}{7}$ = ................
20. $\frac{19}{22} \times 1\frac{21}{25} \times 2\frac{2}{10}$ = ................
21. $\frac{4}{6} \times 1\frac{3}{4} = \frac{4}{6} \times \frac{7}{4} = \frac{7}{6}$
22. $1\frac{7}{9} \times \frac{3}{14}$ = ................
23. $\frac{1}{2} \times 2\frac{2}{3}$ = ................
24. $\frac{9}{10} \times 2\frac{5}{9}$ = ................
25. $1\frac{9}{10} \times \frac{5}{18}$ = ................
26. $\frac{6}{14} \times 3\frac{7}{9}$ = ................
27. $2\frac{6}{7} \times \frac{14}{5}$ = ................
28. $\frac{2}{5} \times 5\frac{5}{2}$ = ................
29. $\frac{21}{25} \times 3\frac{5}{7}$ = ................
30. $\frac{2}{14} \times 2\frac{7}{10}$ = ................
31. $1\frac{9}{14} \times 1\frac{2}{7}$ = ................
32. $2\frac{2}{3} \times \frac{18}{6}$ = ................
33. $1\frac{2}{7} \times 3\frac{1}{6}$ = ................
34. $2\frac{2}{5} \times \frac{10}{12}$ = ................
35. $10\frac{1}{3} \times \frac{6}{5}$ = ................
36. $2\frac{1}{6} \times \frac{6}{13}$ = ................
37. $2\frac{1}{5} \times 1\frac{3}{22}$ = ................
38. $3\frac{1}{6} \times 1\frac{5}{19}$ = ................
39. $2\frac{2}{5} \times \frac{3}{5} \times \frac{10}{6}$ = ................
40. $1\frac{1}{2} \times \frac{4}{5} \times 2\frac{1}{8}$ = ................

**பின்னங்கள் 2** **அலகு 14**

### ஓர் எண்ணின் நிகர்மாற்று

1.இரண்டு எண்களின் பெருக்கம் 1 ஆயின், ஒவ்வோர் எண்ணும் மற்றைய எண்ணின் நிகர்மாற்று என அழைக்கப்படும்.

| எண் | நிகர்மாற்று |
|---|---|
| 2 | $\frac{1}{2}$ |
| $\frac{2}{3}$ | $\frac{3}{2}$ |
| $1\frac{3}{4} = \frac{7}{4}$ | $\frac{4}{7}$ |

(7 ஆம் பக்கம் பார்க்க)

# ஆடைத் தொழிலாளர்களின் உரிமைகளை தொற்றின் போது பாதுகாத்தல் வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

கொவிட் தொற்றுநோய்களின் போது இலங்கை அரசாங்கம் மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்கள், ஆடைத் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் வேலை வாய்ப்பு உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

கொவிட் தொற்றுகளின் புதிய அலைகளைக் கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் 2021 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதிக்கு பின்னர் கடுமையான முடக்கல் மற்றும் பொதுக்கூட்டங்கள், பயணத் தடைகள் உள்ளிட்ட பிற நடவடிக்கைகளைப் பயன்படுத்தியது.

இருப்பினும், ஆடைத் தொழிற்சாலைகள் வழமையான பணிகளில் ஈடுபட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார்.

இந்தநிலையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொது சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர், தொழிற்சாலைகளிலும், தொழிலாளர்கள் வசிக்கும் நெரிசலான வாடகை வீடுகளிலும் ஏராளமான வைரஸ் தொற்றுகள் கண்டறியப்பட்டுள்ளன என அறிக்கை அளித்துள்ளனர்,

மேலும் உற்பத்திகளை பராமரிப்பதற்காக, முதலாளிகள் சோதனைகளை மேற்கொள்ளவில்லை என்றும் குறைவான தொற்றாளிகளே இருக்கின்றார் எனவும் தெரிவித்து வருவதாக சுகாதார ஆய்வாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே இலங்கையின் ஆடைத் தொழிலாளர்களைப் பாதுகாப்பாக வேலை செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு, அவர்கள் நோய்வாய்ப்பட்டாலும் அல்லது தனிமைப்படுத்த வேண்டியிருந்தாலும் கூட அவர்களுக்கு சரியான ஊதியம் வழங்கப்படுவது உறுதிச் செய்யப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி கோரியுள்ளார்.

இலங்கை அரசாங்கமும் முதலாளிகளும் ஏற்கனவே உள்ள ஒப்பந்தங்களையும் வழிகாட்டுதல்களையும் முழுமையாக செயல்படுத்த வேண்டும். தொழிற்சாலைகளில் கொவிட் நோய்த்தொற்றுகள் தொடர்பாக வெளிப்படையாக இருக்க வேண்டும், மேலும் தொழிலாளர்களின் நலனுக்காக வசதிகளை வழங்க வேண்டும் என்றும் மீனாட்சி கங்குலி கேட்டுள்ளார்.

இலங்கையில் ஏழு பெண்களில் ஒருவர் ஆடைத் துறையில் பணிபுரிகிறார் என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐ.எல்.ஓ) தெரிவித்துள்ளது. இந்த நிலையில் கடந்த ஏப்ரல் முதல் ஆடைத் தொழிற்சாலைகளில் மீண்டும் மீண்டும் தொற்றுக்கள் ஏற்பட்டுள்ளன.

எனினும் நான்கு அமைப்புகளைச் சேர்ந்த ஐந்து தொழிலாளர் உரிமை ஆர்வலர்கள், மனித உரிமைகள் கண்காணிப்பகத்திடம் தொழிற்சாலை மேலாளர்கள் போதுமான தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இல்லாமல் பணியாற்றுமாறு தொழிலாளர்களுக்கு அழுத்தம் கொடுத்தனர் என முறையிட்டுள்ளனர் என்று மீனாட்சி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 2021, ஜூலை 8 ஆம் திகதி கொழும்பில் நடந்த தொழிலாளர் உரிமை போராட்டத்தில் தொழிற்சங்கவாதிகள் தடுத்து வைக்கப்பட்டு, கொவிட் தனிமைப்படுத்தப்பட்ட நிலையத்துக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டமையை அவர் கண்டித்துள்ளார்.

பொது சுகாதார அடிப்படையில் பொது ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் தடைசெய்த இரண்டு நாள்களுக்குப் பிறகு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மீனாட்சி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 8 | கணிதம் | அலகு 13

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1.நிகர்மாறாக மாற்றுக.

1. $2$ = ...............
2. $5$ = ...............
3. $7$ = ...............
4. $\frac{1}{3}$ = ...............
5. $\frac{3}{2}$ = ...............
6. $\frac{9}{10}$ = ...............
7. $\frac{11}{2}$ = ...............
8. $2\frac{3}{2}$ = ...............
9. $2\frac{4}{7}$ = ...............
10. $2\frac{3}{8}$ = ...............

2.ஒரு பின்னத்தை முழு எண்ணால் வகுத்தல்

1. $\frac{2}{3} \div 4 = \frac{2}{3} \times \frac{1}{4} = \frac{1}{6}$
2. $\frac{4}{5} \div 20$ = ……….... × ……….... = ……….....
3. $\frac{2}{15} \div 4$ = ……….... × ……….... = ……….....
4. $\frac{1}{5} \div 3$ = ……….... × ……….... = ……….....
5. $\frac{4}{11} \div 12$ = ……….... × ……….... = ……….....
6. $\frac{3}{10} \div 27$ = ……….... × ……….... = ……….....
7. $1\frac{2}{7} \div 36$ = ……….... × ……….... = ……….....
8. $1\frac{2}{3} \div 15$ = ……….... × ……….... = ……….....
9. $3\frac{1}{5} \div 16$ = ……….... × ……….... = ……….....
10. $9\frac{2}{3} \div 29$ = ……….... × ……….... = ……….....

3.ஒரு பின்னத்தை வேறொரு பின்னத்தால் வகுத்தல்

1. $\frac{2}{3} \div \frac{1}{4} = \frac{2}{3} \times 4 = \frac{8}{3}$
2. $\frac{4}{5} \div \frac{1}{2}$ = ……….... × ……….... = ……….....
3. $\frac{2}{15} \div \frac{4}{7}$ = ……….... × ……….... = ……….....
4. $\frac{1}{5} \div \frac{3}{4}$ = ……….... × ……….... = ……….....
5. $\frac{12}{7} \div \frac{9}{13}$ = ……….... × ……….... = ……….....
6. $\frac{7}{10} \div \frac{6}{7}$ = ……….... × ……….... = ……….....
7. $3\frac{1}{5} \div \frac{4}{3}$ = ……….... × ……….... = ……….....
8. $5\frac{3}{5} \div \frac{4}{5}$ = ……….... × ……….... = ……….....
9. $10\frac{2}{5} \div \frac{4}{15}$ = ……….... × ……….... = ……….....
10. $9\frac{2}{3} \div \frac{29}{10}$ = ……….... × ……….... = ……….....

**ஆக்கம் : தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை) யா/செங்குந்த இந்துக் கல்லூரி**

**வழிகாட்டலும் ஆலோசனையும் : திரு ஞானமணி இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

## வெளிநாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்ட நபர் தீவிரவாத ஒழிப்பு பிரிவால் கைது

கட்டாரிலிருந்து நாடு கடத்தப்பட்ட நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

குறித்த நபர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஊக்குவித்த குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தீவிரவாத ஒழிப்பு பிரிவினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மாஅதிபருமான அஜித்ரோஹண தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் 14 நாள்கள் முள்ளியவளை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

41 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரூபாவின் பெறுமதி மேலும் சரிந்தது

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று வீதத் திற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 202.89 ரூபாயாக பதிவாகியுள்ளது. நாட்டில் தற்போது வெளிநாட்டு நாணயத்தின் பற்றாக்குறை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, வங்கிகளின் பணப் பரிமாற்ற வீதம் அதிகமாக இருப்பதாகவும், அமெரிக்க டொலர்கள் கறுப்பு சந்தையில் மிக உயர்ந்த மட்டத்தில் வர்த்தகம் செய்யப்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அதற்கமைய கறுப்பு சந்தையில் அமெரிக்க டொலர் ஒன்றின் விலை 230 ரூபா வரை அதிகரித் துள்ளதாக நிதி சந்தை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இறக்குமதி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடு படும் வர்த்தகர்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பற்றாக்குறை காரணமாக கடும் சிரமத்துக்கு முகம் கொடுத்துள்ளனர்.

## மன்னார் கலாமன்றங்களுக்கு இசைக் கருவிகள் வழங்கல்



மன்னாரில் பதிவு செய்யப் பட்ட கலா மன்றங்களுக்கு இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில், மாவட்ட செயலகத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. இதன்போது மன்னார் மாவட்டத்தில், பதிவு செய் யப்பட்டுள்ள 6 கலாமன்றங் களுக்கு இசைக்கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாண பண்பாட் டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சுஜீவா சிவதாஸினால் இந்த இசைக்கருவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவம் அமைத்த வீடுகள் கிளிநொச்சியில் பயனாளிகளிடம்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கோணாவில் கிழக்கு மற்றும் வட்டக்கச்சி சிவிச்சென்ரர் பகுதிகளில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட புதிய வீடுகள் இரண்டு கடந்த திங்கட்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டுக்குட்பட்ட கோணாவில் கிழக்குப் பகுதியில் வசிக்கின்ற முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட பெண் பயனாளி மற்றும் வட்டக்கச்சி சிவிச் சென்ரர் பகுதியிலும் வாழும் கூலித் தொழிலாளி குடும்பத்துக்கு இந்த வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.பி.ரணசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக 57 ஆவது படைப்பிரிவால் குறித்த வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன.



இந்த நிகழ்வில் கிளிநொச்சி இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.பி.ரணசிங்க, கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன், கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தாகரன் ஆகியோர் கலந்துகொண்டு வீட்டை குடும்பத்தினரிடம் கையளித்தார்கள்.

தொடர்ந்து குடும்பத்தினருக்கான உணவு பொதிகளும், அன்பளிப்புகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 65

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**192. சம்பந்தர் தேர்தலுக்காக மாவீரர்களுக்கு மரியாதைகள் செலுத்தி, பேச்சுக்கள் செய்தாரென்றால் அவரை ஏன் விடுதலைப் புலிகள் பேச்சுக்களுக்கு அனுப்பவில்லை?**

அதற்கான பேச்சுவார்த்தை ஏதும் சம்பந்தரோடு அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு நடத்தப் பட்டதா என்பது நான் அறியேன். விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகள் தங்கள் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தாலும் அவர்கள் தான் ஏகோபித்த தலைவர்கள் என்ற நிலைப்பாட்டாலும் அப்படிக் கேட்க சாத்தியமிருக்கவில்லை. அந்தக் கூட்டுறவும் கூட இரண்டு பகுதிகளுக்கும் வசதியான ஓர் ஏற்பாடுதான். நான் அறிந்த வரையில் விடுதலைப் புலிகள் கூட நோர்வே அதிகாரிகளை சம்பந்தரோடோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடோ கலந்துரையாட ஊக்குவிக்கவில்லை. அவர்கள் பெயருக்கு தலைவர்களாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டார்கள். ஆனால் நாணயக்கயிறு விடுதலைப் புலிகளிடமே இருந்தது.

**193. மாவீரர்களுக்கு சம்பந்தர் மரியாதை செலுத்துகிறார். ஆயின் சுமந்திரன் மாவீரன் பண்டிதருக்கு மாவீரர் நாளன்று விளக்கேற்றியமையை தனது (வழக்குத் தொடர்பான) கட்சிக்காரர் என்றுதான் நான் செய்தேன் என்கிறாரே?**

அது அவரது தனிப்பட்ட கருத்தும் விருப்பமும். அதற்கான காரணங்கள் நியாயமானவையா சரியானவையா என்பது அவருக்கும் தமிழர்களுக்கும் உள்ள ஒரு விடயம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரியும். விடுதலைப் புலிகளின் கடைசிக் கட்டமான ஏப்ரலின் முடிவு நாள்களிலிருந்து பல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தர் உள்பட பகிரங்க வெளியில் இல்லை. யுத்தம் முடிந்து, பல இயக்க உறுப்பினர்கள் புனர்வாழ்வு பெற்று, விடுதலையாகி வாழ்வாதாரத்துக்கும் சமுதாயத்தில் உள்வாங்கப்படுவதற்கும் ஏங்கி நிற்கிறார்கள். அவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில்



உறுப்புரிமை கொடுத்து, சிலரைக் கூட்டமைப்புக்காகத் தேர்தல்களில் நிற்க வாய்ப்புத் தரவேண்டும் என்று கோரப்பட்டது. இது நிராகரிக்கப்பட்டது. அதுவே இன்றைய நிலையும் கூட. அவர்களது தோளிலே ஏறி நின்று வெற்றி கொடி நாட்டியவர்கள், இன்னுமொரு ஏணியாலே இறங்கி ஏறிய தோள்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. அரசாங்கங்களுடனும் அயல் நாடுகளுடனும் தொடரும் அரசியல் தீர்வு பேச்சுக்களில் சம்பந்தரின் திறமை, அனுபவம் சாணக்கியத்திலுமே நம்பியிருக்கிறோம்.

**194. தற்காலிய சுயநிர்ணய அதிகார சபையின் (ISGA) அமர்விற்குப் பிறகு பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தனவா?**

அவை கைவிடப்பட்டு தேர்தல் சூடுபிடித்தது. இதற்கு சந்திரிகா ஜே.வி.பியுடனும் பௌத்த தீவிரவாதக் கட்சிகளுடனும் கூட்டுச் சேர்ந்திருந்தார். விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த அதிகார சபையின் அடிப்படையில் சமாதானத் தீர்வு முடியாது என்ற வகையில் அவரது தேர்தல் காலப் பேச்சுக்கள் அமைந்தன. ரணிலோ எப்படியான தீர்வு என்பதனை கோடி காட்டாமல், கூட்டுறவு அடிப்படையில் முன்னேறினால்தான் நாடு சுபீட்சம் பெறும், சிங்கப்பூர், மலேசியா போன்று ஒரு விரைவான முன்னேற்றத்துக்கு அதுவே வழி என பிரதிவாதம் செய்தார். ஆனால் ஜே.வி.பியும் தீவிர பௌத்தவாத குழுக்களும் இந்தத் தீர்வுக்கான பேச்சுக்களுக்காக மேற்குலக நாடுகள் தங்களை அடிமைப்படுத்துகிறார்கள், தமது சுதந்திரம் பறிபோகிறது, தமிழர்களை அவற்றுக்காகப் பயன்படுத்துகிறார்கள் எனக் கூக்குரலிட்டது.

சந்திரிகா 22ஏப்ரல் 2004 இல் நோர்வேயின் பிரதமரைச் சந்தித்து பேச்சுக்களை மீளத் தொடங்குமாறு கேட்டு அதற்கு ஆதரவைத் தருவதாகவும் தெரிவித்திருந்தார். நோர்வேயின் பிரதமர் விடுதலைப் புலிகளிடமும் இருந்து அப்படியான ஒரு விருப்பம் தெரிவிக்கப்பட வேண்டும் என்றார். சந்திரிகா தேர்தல் காலங்களில் பேசியவற்றை நினைவூட்டி, அவரது கூட்டுக் கட்சிகளின் நிலைப்பாடுகளில் எப்படி இதனை முன்னெடுக்க முடியும் என சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டன. சந்திரிகாவின் பதில் அவை தேர்தலில் வெல்வதற்கான பேச்சுக்கள், ஜே.வி.பியையும் கூட்டுக் கட்சிகளையும் தான் பார்த்துக் கொள்வார் என்பதுதான்.

இதனைத் தெரியப்படுத்த விடுதலைப்புலிகள் அவர்களுக்கு அங்கலாய்ப்பாக இருந்த மூன்று விடயங்களை முன்னெடுத்து, அவற்றில் இணக்கம் ஏற்பட்டால் பேச்சுக்களுக்கு இணங் குவோம் என தகவல் தந்தனர்.

முதலாவது - விடுதலைப் புலிகள் மாத்திரமே தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர்கள் என்ற இணக்கப்பாடு.

இரண்டாவது - விடுதலைப் புலிகள் ஒரு சரிசமமான பங்குதாரர்களாகப் பேச்சுக்களில் சேர்த்து நடத்தப்பட வேண்டும்.

மூன்றாவது - விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த தற்கால சுயநிர்ணய அதிகார சபையின் (ISGA) அடிப்படையிலேயே பேச்சுக்கள் தொடரப்பட வேண்டும் என்பது.

விடுதலைப் புலிகள் தற்காலிக சுயநிர்ணய அதிகாரசபையானது எந்த ஒரு நிரந்தரத் தீர்வை நோக்கி நகரமுன்னரும் அங்குரார்ப்பணம் செய்யப்படவேண்டும், அது பேச்சளவில் இருக்கக்கூடாது என நிர்ப்பந்தித்தார்கள். இவற்றைத் தொடர்ந்து நோர்வேயின் விடார் ஹெல்கிஸனைச் சந்தித்த சந்திரிகா 27 ஜூலை 2004இல் பேச்சுவார்த்தைகளை ISGA அடிப்படையில், ஆனால், அது சிறிலங்காவின் ஒற்றையாட்சிக்குள் Unitary State அமையவேண்டும் என்று கண்டிப்பு வைத்தார்.

சந்திரிகா முன்னர் தேர்தல்களின் போது பேசியவற்றுக்கும் பின்னர் தனிப்பட்ட ரீதியில் இப்பொழுது வைத்த கருத்துக்களுக்கும் சொன்னவற்றுக்கும் இடையில் பாரிய மாற்றங்கள் இருந்தன. இதைச் சொன்னதும் அடுத்த நாளே ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ, சந்திரிகாவின் நிலை அதுவானால் தாம் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவோம் என அறிவிக்க, இவைகளால் சந்திரிகா தன் கருத்துக்களை 2 ஓகஸ்ட் 2004 வாபஸ் பெற்றார்.

**195. பாலசிங்கம் ஒஸ்லோவில் ஏற்றுக் கொண்ட தீர்மானத்துக்கும் இந்த இடைக்கால சபைக்கும் (ISGA) என்ன வித்தியாசம்?**

பாலசிங்கம் ஏற்று கொண்டது இரு பக்கமும் ஒரு கூட்டாட்சியின் (Federal) அடிப்படையில் நிரந்தரத் தீர்வை நோக்கி போவதென்பது. இதனால் தான் விடுதலைப் புலிகளிடையே வேற்றுமைகள் தோன்றின. ஆனால் இந்த ISGA அமைப்போ, ஒரு நேரடியான சுயாட்சியை, எல்லா அதிகாரங்களையும் கொண்டு நடைமுறைக்கு கொண்டு வரும். அதாவது இரண்டு இனத்தவரும் தங்கள் பகுதியில் அதிகாரங்களை மற்றவர் நீக்க முடியாதபடி ஏற்று, இருவருக்கும் பொதுவான சிலவற்றில் சேர்ந்து செயல்படுவதாக அமைந்தது. பாலசிங்கம் ஏற்றது கூட்டாட்சி (Federal) ஆனால், ISGA ஒரு கூட்டமைப்பு (Confederation) அல்லது இணைப்பாட்சி என்று சொல்லலாம். மேலெழுந்தவாரியாக பார்த்தால் கூட்டமைப்பு என்பது இரண்டு இனங்களும் அடிப்படையில் பிரிந்து, பின் இணைந்து ஒரு



கூட்டமைப்பை (Confederation) உருவாக்கின்ற தோற்றத்தை தரும். ஆனால் கூட்டாட்சி (Federal) என்பது அப்படியல்ல. அவை அப்படியான பிரிவினை தோற்றத்தை தராது. கூட்டாட்சியையே காலம் காலமாக பிரிவினை என எதிர்த்தவர்கள் கூட்டமைப்பு (இணைப்பாட்சி) என்றால் வாளாவிருப்பாரா?

(வளரும்......)

# அரசியல் களத்தில் எவராலும் என்னை மௌனிக்கச் செய்ய முடியாது - தயாசிறி

கொழும்பு, ஜூலை 14

அரசியல் களத்தில் எவராலும் தன்னை மௌனிக்கச்செய்ய முடியாது என இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான முறுகல் நிலை தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர் –

'ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியில் சுதந்திரக் கட்சியின் பங்களிப்பும் உள்ளது. இதனை புரிந்துகொள்ளாமல், நன்றி மறந்து விமர்சிக்கின்றனர்.

சுதந்திரக் கட்சியின் ஆதரவு இல்லாதிருந்திருந்தால் கண்டி மாவட்டத்தில்கூட 50 ஆயிரம் வாக்குகளால் தோல்வியைச் சந்திக்க நேரிட்டிருக்கும் என்பதை திலும் அமுனுகம போன்றவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியும் செய்கின்றது. அரசியலும் செய்கின்றது. ஆனால் சுதந்திரக் கட்சிக்கு இவ்விரண்டுமே இல்லாமல்போயுள்ளது.

எனவே, என்னை எவரும் மௌனிக்க வைக்கமுடியாது. நான்தான் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளேன்.' – எனக் குறிப்பிட்டுள்ளார்.



## சுகாதார சேவைப் பணிப்பாளரை பதவி விலகுமாறு கோரிக்கை

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு அசேல குணவர்தன பொருத்தமற்றவர். எனவே, அப்பதவியில் இருந்து அவர் உடன் விலக வேண்டும் என மக்கள் உரிமையை பாதுகாக்கும் இயக்கத்தின் உறுப்பினர் பத்ம தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

'சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸார், கூலிப் படைபோல் செயற்படுகின்றனர்.

நாட்டு மக்களை பயங்கரவாதிகளாகக்கருதி அவர்களை ஒடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலைமை நீடித்தால் சர்வதேச மட்டத்தில் எமது நாடு அபகீர்த்திக்குள்ளாகும். இந்நிலைமைக்கு வழிசமைத்துக் கொடுப்பது யார்?



சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் யாரின் தேவையைப் பூர்த்தி செய்கின்றார். அப்பதவிக்கு அவர் பொருத்தமற்றவர். எனவே, கௌரவமாக பதவி விலகுமாறு வலியுறுத்துகின்றோம்.' – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மன்னாரில் மேலும் 22 ஆயிரத்து 230 பைஸர் தடுப்பூசிகளை செலுத்தமுடிவு

### சுகாதாரப் பணிப்பாளர் விநோதன்

மன்னார் மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ள மேலும் 22 ஆயிரத்து 230 'பைஸர்' தடுப்பூசிகளை, இன்று (புதன்கிழமை) முதல் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் த.விநோதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கடந்த வெள்ளிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை கிடைக்கப்பெற்ற 20 ஆயிரம் 'பைஸர்' தடுப்பூசிகளில் 19 ஆயிரத்து 500 வரையிலான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. மீதம் இருக்கின்ற தடுப்பூசிகளையும் செலுத்தவுள்ளோம்.

இந்நிலையில் திங்கள் இரவு, எமக்கு மேலும் 22 ஆயிரத்து 230 பைஸர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் தடுப் பூசிகளையும் இன்று முதல் விநியோகிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

குறித்த தடுப்பூசிகள், மன்னார் மாவட்டத்தில் 5 அல்லது 6 நிலையங்களில் ஒவ்வொரு நாளும் வழங்கப்படும் – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வியாழேந்திரனின் மெய்க்காவலருக்கு விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிப்பு



பொதுமகன் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு, தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.எம்.றிஸ்வான் முன்னிலையில் மேற்படி வழக்கு, கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சந்தேகநபரான மெய்ப்பாதுகாவலரை நீதிமன்றத்துக்கு அழைத்து வரமுடியாத நிலையில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்றது.

இந்நிலையிலேயே சந்தேகநபரான மெய்ப்பாதுகாவலரை, எதிர்வரும் 26 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி ஏ.சி.எம்.றிஸ்வான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த ஜூன் 21ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவர், பொதுமகன் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில், மகாலிங்கம் பாலசுந்தரம் ( வயது 34) என்பவர் உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஐந்து மாடிக் கட்டடம் குருநாகலில் தாழிறக்கம்

குருநாகல் – கண்டி வீதியில் கடுகஸ்தோட்டை முச்சந்திக்கு இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஐந்து மாடிகளைக் கொண்ட வர்த்தக கட்டடம் ஒன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை திடீரென தாழிறங்கியுள்ளது.

தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மீள் அறிவிப்பு வரும் வரையில் கடுகஸ்தோட்டை – குருநாகல் வீதியில் கனரக வாகன போக்குவரத்திலிருந்து விலகியிருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறித்த கட்டடம் தாழிறங்கியமையால் எவ்வித உயிரிழப்புகளும் பதிவாகவில்லை என தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மட்டக்களப்பில் நேற்றும் முன்னெடுக்கப்பட்டது

மட்டக்களப்பில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஆசிரியர்களுக்கே, நேற்றுக் காலை முதல் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு – மகாஜனக்கல்லூரியின் ஒன்றுகூடல் மண்டபத்தில், கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரனின் வழிகாட்டலில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.கிரிசுதனின் தலைமையில் இந்தத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் நேற்று, 1,700 ஆசிரியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன என மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.கிரிசுதன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2 ஆம் கட்டத்துக்கான முதல் டோஸ் ஊசி 50 ஆயிரத்து 682 பேர் இதுவரை பெற்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற 2ஆம் கட்டத்துக்கான முதல் டோஸ் தடுப்பூசியை 50 ஆயிரத்து 682 பேர் இதுவரை பெற்றுக் கொண்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை முதல் 2ஆம் கட்டத்துக்கான முதல் டோஸ் தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை நேற்றைய தினமும் கொரோனாவுக்கான சினோபோர்ம் தடுப்பூசியை 1,825 பேர் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | விஞ்ஞானம் | அலகு 09

### ஒளி - விடைகள்

**தளவாடிகள் பயன்படும் சந்தர்ப்பங்கள்**

17) நுணுக்குக்காட்டிகளில் ஒளியை ஒருமுகப்படுத்த
18) கலையுருக்காட்டிகளை ஆக்க
19) சூள்காட்டிகளை உருவாக்க
20) கலையுருக்காட்டி
21) சூள்காட்டி
22) சுரங்கங்களில்
23) சுவருக்கு அப்பாலுள்ள பொருட்களைப் பார்க்க
24) கீழ்மட்டத்தில் இருந்து உயர்மட்டங்களில் நடைபெறுவனவற்றை அவதானிக்க

**9.3 வளைவாடிகளில் தோன்றும் விம்பங்கள்**

1) குழிவாகவும், குவிவாகவும்
2) தனி, திசை
3) ஒளிக்கற்றை
4) சமாந்தர
5) குழிவாடி
6) சமாந்தர, விரிந்து
7) குவிவாடி
8) பொருளை விடப் பெரியது
9) பெறமுடியும், தலைகீழானது
10) பெறமுடியும், தலைகீழானது, பொருளை விடச் சிறியது
11) நுணுக்குக் காட்டியில் வழுக்கியினூடாக ஒளியை ஒன்று குவிப்பதற்கு
12) பல் வைத்தியர்கள் பற்களை சோதிப்பதற்கு
13) சூரிய அடுப்பில்
14) பெறமுடியாது, பொருளை விடச் சிறியது
15) நிமிர்ந்தது, பொருளை விடச் சிறியது
16) வாகனங்களின் பக்கக் கண்ணாடியாக.

# சினிமாத்தடம்

## ஒரு பார்வை




(நேற்றைய தொடர்ச்சி..)

சர்வதேச திரைப்படங்கள் மட்டுமன்றி எமது நாட்டில் வெளிவந்த சகோதரமொழி திரைப்படங்கள் சார்ந்தும் விமர்சனப் பாங்கான பார்வையை ஆசிரியர் முன்வைத்துள்ளார். இந்திய சினிமாவின் தாக்கங்களிலிருந்து விடுபட்டு இலங்கை சினிமாவுக்கான நவீன யதார்த்தத்தை அறிமுகப்படுத்தி புதிய பரிமாணங்களுடன் சிங்கள சினிமாக்கள் வெளிவரத் தொடங்கின. ஆரம்ப காலங்களில் அதாவது 1956 க்கு முன்பு சிங்களத் திரைப்படங்கள் உள்ளடக்கம், வடிவமைப்பு மற்றும் பாடல்கள் உட்பட அனைத்தும் தென்னிந்திய சாயலாகவே காணப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்கள் சிறந்த பல படைப்புக்கள் உருவாக வழிவகுத்தன.

'மனித மனதில் கொழுந்து விட்டெரியும் ஆசையும், உறவுகளால் ஏற்படும் பிணைப்பும், அவனை எல்லையில்லாத துயரத்திற்கு இட்டுச் செல்லும் என்ற பௌத்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட 'சங்காரா' திரைப்படத்தின் மீதான ஆசிரியரின் வரவேற்பு அபரிமிதாய் தென்படுகின்றது. இத்திரைப்படம் பிரசன்ன ஜெயகொடி என்ற சிங்கள மொழி திரைப்பட நெறியாளரின் படைப்பாகும். இத்திரைப்படம் உரையாடல்களில் தங்கியிராது ஒழுங்காகவும், திறமையாகவும், ஆழ்ந்த கலையுணர்வுடன் அமைக்கப்பட்ட காட்சிப் படிமங்களாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னணி ஒலிகளாலும் நெறியாளர் நகர்த்தியிருப்பதை இந்நூலின் ஆசிரியர் பெருமிதத்துடன் கூறியுள்ளார். அத்தோடு இத்திரைப்படத்தின் மிகமுக்கிய பேசுபொருளான ஒளிப்பதிவும், பின்னணி இசையும் சார்ந்து ஆசிரியர் கவனம் செலுத்தியுள்ளார். தொடர்ந்து சிங்கள மொழித் திரைப்படங்கள் மீது பரிச்சயமுள்ள இவர் பிற்காலங்களில் வந்த பிரசன்ன ஜெயகொடியின் படைப்புக்கள் அவ்வளவான வரவேற்பைப் பெறவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இந்திய சினிமாவின் தாக்கங்களிலிருந்து விடுபட்டு இலங்கை சிங்கள சினிமாவுக்கான நவீன யதார்த்தத்தை அறிமுகப்படுத்தியவரும், சர்வதேச மட்டத்தில் ஓர் அடையாளத்தை உருவாக்கித் தந்தவருமான லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் திரைப்படமான அம்மாவருணே, அவருடைய ஆரம்ப கால படைப்புக்களான ரேக்காவ, கம்பெரலிய ஆகிய இரு திரைப்படங்களைப் போன்று இத்திரைப்படம் வரவேற்பைப் பெறவில்லை என்று கருதுகின்றார் ஆசிரியர். பீரிஸின் இவ் அம்மாவருணே திரைப்படம் விரிந்ததொரு பார்வையைத் தொலைத்துவிட்டு, கட்டமைத்துள்ள வெகுஜன கருத்தாக்கங்களால் தன்னில் ஏற்படுத்திய அதிருப்தியைக் குறிப்பிட்டுள்ளார். கேதாரநாதன் சிறந்த நாவல்களைத் தேடி படிக்கக் கூடியவர். அவருடைய தேடல் என்பது பரந்துபட்டது என்றே கூற வேண்டும். ஆகவே, நாவல்கள் தழுவிய லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் படைப்பாக்கங்களைப் போன்று இத்திரைப்படம் பெரும் எதிர்பார்ப்பை அளிக்கவில்லை என்பதையும் நன்கறிந்துள்ளார்.

ஆசிரியர் சிறந்த திரைப்படங்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதோடு நின்றுவிடாது, அத்திரைப்படத்தை இயக்கிய நெறியாளர்களின் நேர்காணல்களையும் ஆங்கிலத்திலிருந்து மொழிப் பெயர்த்து வாசகர்களுக்காக இணைத்துள்ளார். இந்நேர்காணல்



களுக்கான கேள்விகள் தொகுக்கப்பட்டு மிக நேர்த்தியாக, தேவைக்களவான விடயங்களை புரியக்கூடிய வகையில் ஆசிரியர் முன்வைத்துள்ளார். இங்கு நெறியாளர்களின் ஒரு படைப்பு சார்ந்த வினாக்களும், விடைகளும் மட்டும் தொகுக்கப்படவில்லை. மாறாக அவர்களின் அனைத்துப் படைப்புக்களையும் கேள்விக்குட்படுத்தும் வகையில் அமைந்த கேள்விகளைத் தொகுத்து சிறந்த ஓர் முழுமையான நேர்காணலை வாசகர்களுக்கு அளித்துள்ளமை அவருடைய ஆழமான தேடலையும், நேர்த்தியான தொகுப்பையும், ஊடகவியலின் திறமையையும் எமக்குப் புலப்படுத்தி நிற்கின்றது.

சிங்கள சினிமா வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவரென அனைவராலும் அறியப்படும் தர்மசேன பதிராஜா பற்றிய மொழிப்பெயர்ப்புக் கட்டுரையையும் இங்கு இணைத்துள்ளார். தன்னுடைய படைப்புக்களை மிக சொற்ப அளவிலேயே வழங்கியிருந்தாலும் சிங்களத் திரைப்படத்துறையின் முன்னோடியாகத் திகழ்பவர்.

இலங்கைத் தமிழ்ப் பரப்பில் ஆரம்ப காலந்தொட்டு படைப்புக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அவை இன்றளவும் பாரிய ஒரு திருப்பத்தைக் காணவில்லை என்றே கூற வேண்டும். எம் தமிழ்ப் பரப்போடு இணைந்து பயணித்த சிங்கள சினிமாத்துறை இன்று சர்வதேச திரைப்பட விழாக்கள் வரை கால்பதித்துள்ளது. இத்தகையதொரு மாற்றத்தை நன்கு அறிந்தவரான இந்நூலின் ஆசிரியர் அவர்களின் வளர்ச்சிப் போக்கில் மாற்றங்களை ஏற்படுத்திய நபர்களையும், அவர்களின் சாதனைகளையும் தன்னுடைய எழுத்துக்கள் மூலம் தமிழ்ப் பரப்பில் கொண்டு வந்துள்ளமை எமக்கான தேவைப்பாடுள்ளமையை உணர்த்துகின்றது.

அத்தோடு ஒரு சிறந்த திரைப்பட நெறியாளர் உருவாகும் போது அவருடன் இணைந்து நல்ல ஒளிப்பதிவாளர்களும் உருவாகின்றார்கள் என்றதனடிப்படையில், சிறந்த திரைப்படங்களின் ஒளித்தொகுப்பு மூலம் பார்வையாளர்கள் மத்தியில் திரைப்படங்கள் நிலைத்திருப்பதற்கான அடித்தளத்தையும் நன்கறிந்தவர். அந்தவரிசையில் காலஞ்சென்ற திரைப்பட மேதை சத்யஜித்ரேயின் படங்களில் அறிமுகமாகிய ஒளிப்பதிவாளர் மகாஜன் மற்றும் இலங்கையில் பிரசித்திப் பெற்ற எம். டி. மகிந்தபால ஆகியோரின் திரையுலக வாழ்க்கையை, அவர்களின் ஒளிப்பதிவில் இழையோடியிருக்கும் நுணுக்கங்களை ஆசிரியர் மிகத் துல்லியமாக சுட்டிக்காட்டியுள்ளார். இக்கட்டுரைகள் ஆசிரியரின் ஒளிப்பதிவு பற்றிய ஆழ்ந்த பார்வையை புலப்படுத்தி நிற்கின்றது.

இவ்வரிசையிலே தென்னிந்திய சினிமாவை நோக்கியும் நூலாசிரியரின் பார்வை திரும்பியிருக்கின்றது. தென்னிந்தியத் திரைப்பட நெறியாளரான வசந்தபாலனால் 'வெயில்' (2006) திரைப்படத்தினூடாக சேரிப்புற பின்புலத்தில் அடித்தட்டு மக்களின் ஏக்கங்கள், நிராசைகள், போராட்டங்கள் பற்றி அழகியல் உணர்வு, திரைப்படத்தின் நடுப்பகுதி வரைக்கும் திரைப்படத்திற்கு வலுவூட்டியிருப்பதையும், பின்னரைப் பகுதிகள் பழகிய தேய்ந்த அதே தமிழ் திரைப்படப்பாணியில் பயணித்திருப்பது பார்வையாளர்களுக்கு பலத்த ஏமாற்றத்தை அளிப்பதாகக் குறிப்பிடலாம். தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களில் முழு அளவிலான மாற்று சினிமாக்களின் வருகை என்பது அரிது. அவ்வாறு இருக்கையில் பல சிறந்த மாற்று சினிமாக்கள் சார்ந்து நன்கறிந்த ஆசிரியரின் பார்வை ஏன் வெயில் திரைப்படத்தின் மீது பதிந்ததென்பது கேள்விக்குறியே!

மேலும், இந்நூலிலே குறுந்திரைப்படங்கள் சார்ந்த மேளேட்டமான பதிவுகளையே ஆசிரியர் வழங்கியுள்ளார். 'ஒத்துழைப்பானது சக்தியைக் காட்டிலும் சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான சிறந்த வழி' என்பதை உணர்த்தும் 1957 ஆம் ஆண்டு வெளிவந்த A Chairy Tale குறுந்திரைப்படம் குறித்தும், கொலம்பியாவினுடைய அரசியலைப் பேசும், அதேவேளை வித்தியாசமான பார்வைக்கோணத்தில் பார்வையாளர்களைப் புரட்டிப்போட்ட, ஆழமான உணர்வையும் கருத்தையும் பதித்துள்ள The Lunch Date குறுந்திரைப்படம் குறித்த அறிமுகங்களை ஆசிரியர் வழங்கியுள்ளார். இலங்கையில் வெளிவந்த குறுந்திரைப்படங்களை 'தேறிய ஈழக் குறும்படங்கள் நான்கு' என்று தலைப்பிட்டு எழுதியமை தமிழ்ப் பரப்பில் எம்மவர்களின் தேக்க நிலையை உணர்த்தி நிற்கின்றது.

முழுநீளத் திரைப்படங்களில் ஆர்வம் செலுத்தியுள்ள ஆசிரியர் குறுந்திரைப்படங்களை ஆழமாக பார்க்காமல் விட்டிருப்பது கவலைக்கிடமளிக்கின்றது. தற்காலத்தில் இளைஞர்கள் பலர் குறுந்திரைப்படங்களை எடுப்பதில் அதிக நாட்டம் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, குறுந்திரைப்பட உருவாக்கத்திற்கான பின்னணியைச் சரியாக முறையில் தேர்வு செய்வதில் பலர் தவறு விடுகின்றனர். இங்கு கட்டுரைகள் ஆழமான பதிவுகளாக இடம் பெறும் போது அவை அவர்களுக்கு சிறந்த வழிகாட்டல்களாக அமையப் பெறும்.

ஒரு திரைக்கதை உருவாக்கத்திற்கான அடித்தளம் என்பது, அதாவது அக்கதையின் பின்னணியைக்கட்டாயம்அறிந்திருக்கவேண்டிய ஒன்றாகும். ஓர் படைப்பின் தன்மையை, ஆளுமையைத் தீர்மானிப்பதில் கதைப்பின்னணி முக்கிய இடம் வகிக்கின்றது. அத்தகைய திரைக்கதைப் பின்னணி சார்ந்தும், உரையாடல்கள் மற்றும் மொழி சார்ந்த பார்வை என்பது ஓர் திரைப்படப் பார்வையில் முக்கியமான ஒன்றாகும். இவ்வாறு அணுகும் போது ஓர் சினிமா எத்தகைய சினிமா என்பது புலப்படும்.

அதேபோன்று ஓர் திரைப்படத்திற்குப் பின்னணி இசை என்பது மேலும் வலுச்சேர்க்கும். இன்றும் எம்மவர்களின் படைப்புக்கான பின்னணி இசை வேலைபாடுகளுக்காக ஏனைய நாட்டு கலைஞர்களையே நாடிச் செல்ல வேண்டிய ஓர் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. ஒலிப்பதிவில் தேக்க

மு. துலாபரணி
(ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

நிலை காணப்படுகின்றது. திரைப்படங்களில் பயன்படுத்தப்படும் இசை உயிர்துடிப்புள்ளதாய், உணர்வுகளுடன் ஒன்றிக்கக் கூடியதாய் அமைந்திருப்பின் அது பார்வையாளர்கள் மத்தியில் நீங்கா இடத்தைப் பெற்று நிலைத்திருக்கும். தன்னுணர்வுகளைப் பாதித்த சில திரைப்படங்களின் இசைகளை ஆசிரியர் தொட்டுச் சென்றுள்ளார்.

அத்தோடு படத்தொகுப்பு என்பது திரைப்படத்துக்கேயுரிய தனித்துவமான செயற்பாடாகும். படத்தொகுப்பு என்பது வெறுமனே காட்சிகளை வெட்டி நீக்குவதோ அல்லது ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதோ அல்ல. மாறாக அது ஓர் திரைப்படத்தின் வெற்றிக்கும் தோல்விக்கும் காரணமாய் அமையக் கூடியதாகும். இத்தகைய படத்தொகுப்பு சார்ந்த அணுகுமுறைகள் இங்கு காணப்பட்டிருப்பின் படைப்பாளிகளுக்கான படத்தொகுப்புப் பற்றிய புதியதொரு பார்வைக் கோணத்தை அளிக்கவல்லதாய் இருந்திருக்கும்.

ஆழ்ந்த வாசிப்பு, சிறந்த கலந்துரையாடல், விமர்சனப் பார்வை என்பன இவரது எழுத்துக்களில் காணலாம். இவர் மொழியை இலாவகமாகப் பயன்படுத்தக் கூடியவர். இவருடைய எழுத்துநடை என்பது அர்த்தச்செறிவு மிக்கவை. இந்நூலில் முதல் பாகம் முழுவதும் தன்னுடைய பார்வையை தனக்கேயுரிய பார்வையில் வெளியிட்டிருப்பது சாலச்சிறந்தது.

சிறந்த விமர்சனப் பார்வை என்பது கதைக்கரு, கதை உருவாகியப்பின்னணி, தொழில்நுட்ப விடயங்கள், நெறியாளரின் அணுகுமுறைகள், கருத்தியல் ரீதியான விடயங்கள் போன்றவற்றோடு விமர்சகரின் பார்வையைப் பேசுவதாகும். இந்நூலை வாசிக்கும் பலருக்கு இத்தகைய பல விடயங்களை இந்நூல் வழங்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

ஜி. ரி. கோதாரநாதனின் ஆக்கங்கள் அடங்கிய இந்நூல் திரைத்துறை சார்ந்த ஆர்வமுள்ள மாணவர்கள், கலை இலக்கிய விமர்சகர்கள், ஈழத்துப் படைப்பாளிகளுக்கு சிறந்த ஓர் அடித்தளத்தை அமைக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சினிமாத் தொடர்பான தேடலும், பார்வையும் அதிகரித்துள்ள இச்சூழலில் ஜி.ரி. கேதாரநாதனின் இத்திரைப்பட விமர்சன நூல் காலத்தின் கட்டாயமாகும். எம் சமூகத்தினர் மத்தியில் பேசப்பட வேண்டிய விடயங்கள் பல உள்ளன. ஏனைய நாடுகளில் யுத்தத்தின் பின்னர் தம் சினிமா உலகில் பாரிய மாறுதல்களுக்குட்பட்டு சிறந்த பல படைப்புக்களை உலகுக்கு அளித்தனர். ஏன் எம் தமிழ்ப் பரப்போடு இணைந்து பயணித்த சிங்கள சினிமா கூட தன்னுடைய வழி தடங்களை சர்வதேசம் வரை இட்டுச் சென்றுள்ளன. இத்தகையதோர் சூழலில் ஆளுமைமிக்கவர்களின் படைப்புக்கள் எம்மவர்கள் மத்தியில் வரவேற்கப்பட வேண்டியதும், பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

# தீவிரமடையும் ‘டெல்டா’ கொரோனா மேலும் 6 பேருக்குத் தொற்று உறுதி




## இதுவரை 24 பேர் அடையாளம் சுகாதார அமைச்சு எச்சரிக்கை

**இலங்கையில் டெல்டா கொரோனா பிறழ்வு தொற்று தீவிரமடைய ஆரம்பித்துள்ளது. மேலும் 6 பேருக்கு டெல்டா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.**

**இதன்படி, நாட்டில் இதுவரை 24 டெல்டா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.**

**கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு பொது மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.**

இந்தநிலையில், நாட்டில் டெல்டா கொரோனா வைரஸ் பிறழ்வு பரவியுள்ளமை தொடர்பில் ஆராய்வதற்காக மற்றுமொரு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட கொரோனா நோயாளிகளின் 96 உயிரி மாதிரிகளைக் கொண்டு இந்த ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நீர்பீடணம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இந்த மாதிரிகள் எழுமாறாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆய்வு களின் முடிவுகளை இன்னும் ஒரு வாரத் தில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக சந் திம ஜீவந்தர மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## எரிக்கலை மரங்களை வெட்டும் இராணுவம்



(ந.லோகதயாளன்)

இரசாயன உரம் மற்றும் கிருமி நாசினி ஆகியவற்றின் தடையை அடுத்து விவசாயத்தில் ஈடுபடும் படையினர் எரிக்கலையே சேகரிக்கின்றனர்.

கிளிநொச்சி, இரணைமடுப் பகுதியில் உள்ள பிரதான இராணுவ முகாமைச் சேர்ந்த படையினரே அப்பகுதி வீதிகளில் காணப்படும் எரிக்கலம் மரங் களை வெட்டி எடுத்துச் செல்கின்றனர். இதன் மூலம் வீதிதுப் புரவுப் பணியும் இடம்பெறுவதோடு விவசாயத் தேவையையும் பூர்த்தி செய்கின்றனர்.

எரிக்கலம் மரத்தை நீரில் 3 தினங்கள் ஊற வைத்து அந்த நீரை தென்னம் பிள்ளைகளுக்குப் பாய்ச்சு வதன் மூலம் தென்னம்பிள்ளைகளில் இருந்து குரும்பை கொட்டுவதைக் கட்டுப்படுத்த முடியும். இதேபோன்று கிருமி நாசினியான இலைக் கரைசல் தயாரிக்க முடியும் என்பதோடு, எரிக்கலம் மரங்கள் பூச்சிக் கொல்லியாகவும், களைக்கொல்லியாகவும், சேதனப் பசளைக்கும் உகந்ததாகவும் காணப்படுகின்றது.

இவற்றின் காரணமாக வீதியோரங்கள் மற்றும் பற்றைகளில் காணப்படும் எருக்கலம் மரங்களைப் படையினர் வெட்டி எடுத்துச் செல்கின்றனர்.

# வெலிக்கடை படுகொலையின் சாட்சிக்கு மரண அச்சுறுத்தல்

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் இடம்பெற்ற, வெலிக்கடை படுகொலையின் முக்கிய நேரடி சாட்சியாளருக்கு மீண்டும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக, கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு தெரிவித்துள்ளது.

இனந்தெரியாத இரண்டு நபர்கள் ஜூலை 7ஆம் திகதி மாளிகாவத்தையில் உள்ள லக்கிரு செவன ரயில் குடியிருப்பில் வசிக்கும் சுதேஷ் நந்திமல் சில்வாவின் அயல் வீட்டுக்காரர்களிடம் அவர் எங்கு செல்கின்றார்? என்ன செய்கின்றார்? போன்ற விவரங்களை கேட்டறிந்துள்ளனர் என அந்த அமைப்பின் தலைவர், சட்டத்தரணி சேனக பெரேரா ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் எதிர்காலத்தில் சுதேஷ் நந்திமல் சில்வாவின் உயிருக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை வெளிக்காட்டுவதாக அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக காவல்துறையினரிடம் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு தெரிவித்துள்ளது.

‘சி.ஐ.பி. 1/117/42 என் எண்ணின் கீழ், அதேநாளில் நாளில் (2021.07.07) தெமடகொட காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் இரண்டு நபர்களிடம் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக காட்சிகள் அடங்கிய சி.சி.ரி.வி. காணொலிக் காட்சிகள் விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என, கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியா பல்கலையின் முதலாவது துணைவேந்தராக மங்களேஸ்வரன்

(இ.கலையமுதன்)

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த.மங் களேஸ்வரன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வளாகமாக இயங்கி வந்த ‘வவுனியா வளாகம்’ எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் ‘இலங்கை வவுனியா பல்கலைக்கழகம்’ எனத் தரமுயரும் எனக் கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸால் கடந்த மாதம் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் ஒரு நிலையாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த.மங்களேஸ் வரன் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.



# கொரோனா நோயாளி நேற்று தப்பியோட்டம்!

## பொலிஸார் வலைவீச்சு

பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கொரோனா நோயாளி ஒருவர் நேற்று பிற்பகல் வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவிசாவளை, ஹெவஹின்ன வில் வசிக்கும் 72 வயதான நபரே வைத்தியசாலையில் இருந்து தப்பியோடியுள்ளார். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் உள்ள சிங்கராஜா இடைநிலை கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த இந்த நபர், இன்று காலை பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

தப்பியோடிய கொரோனா நோயாளியைப் பிடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# குடாநாட்டில் 107 பேரை சாகடித்தது கொரோனா

## 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்குத் தொற்று

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 6 ஆயிரத்து 15 ஆக அதிகரித்துள்ளது என மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம்மாவட்டத்தில் இது வரை 107 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது 3 ஆயிரத்து 604 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 603 நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

# அரசின் தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் ஜனநாயக குரல்வளையை நசுக்குகின்றன

## தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை கடும் கண்டனம்

சிறிலங்கா அரசின் கொவிட்- 19 தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் ஜனநாயகத்தின் குரல் வளையை நசுக்குவதற்கே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. அரசின் இந்த மோசமான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாகத் தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மேலும் நாட்டில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியினருக்கு ஒரு நியாயமும் அநீதிகளுக்கு எதிராக நீதி கேட்டுப் போராடும் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளுக்கு வேறு ஒரு நியாயம் என்பதும் சிறலங்காவின் அரசமைப்பு சட்டத்தின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் பெரும் அவநம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக, கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்தை எதிர்த்து அறவழியில் குரல் கொடுத்து போராடிய இலங்கை ஆசியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட பௌத்த துறவிகள் உட்பட 16 பேர் சிறிலங்கா தேசத்தின் ஜனநாயகத்துக்கு முரணாக கைதுசெய்யப்பட்டுதனிமைப் படுத்தல் சட்டத்தின்படி கேப்பாப்புலவு முகாமில் அடைக்கப்பட்டிருக்கின்றமையை தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவைவன்மையாககண்டிக்கின்றது.

கொவிட்- 19 சட்டத்தைப் பயன்படுத்தி மக்களின் ஜனநாயகப் போராட்டங்களை அடக்கும் சிறிலங்கா அரசை கண்டித்த ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரின் அறிக்கையை நாம் வரவேற்கின்றோம்.

மேலும் கேப்பாப்புலவு தடுப்பில் இருந்து தொடர்ந்து போராடும் ஜோசப் அணியினருக்கு நாம் எமது பூரண ஆதரவை வழங்குவதோடு சிறிலங்கா அரசிடம் நாம் கோரிக்கை ஒன்றையும் முன்வைக்கின்றோம்.

சிறிலங்காஅரசுசட்டங்களைத்தவறாகப்பயன்படுத்தும் நடவடிக்கைகளை உடனே நிறுத்த வேண்டும்.

இதுவரை காலமும் இவ்வாறு தவறான சட்ட நடவடிக்கைகளால் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதோடு ஜனநாயகத்துக்கு முரணான கொத்தலாவல சட்டமூலத்தை நீக்குமாறும் சிறிலங்கா அரசை கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் நாட்டில் இடம்பெறும் அநீதிகளுக்கு எதிராகப் போராடும் அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளோடும் தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை இணைந்து குரல் கொடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின் றோம். - என்றுள்ளது.

# சமூக ஊடகங்கள் பாவிப்போருக்கு கடுமையான எச்சரிக்கைகள் விடுப்பு

பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களில் ஆபாச காணொலிகள் மற்றும் படங்களை வெளியிட்டனர் என நாட்டின் பல்வேறு பகுதிகளில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் பேச்சாளர் அஜித் றோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் கணினி குற்றப்பிரிவு சந்தேகநபர்களை கடந்த வாரம் கைது செய்ததாக அவர் கூறியுள்ளார்.

வலைத்தளங்களின் மற்றும் சமூக ஊடகங்களில் பெண்களின் நிர்வாணப்படங்கள்மற்றும்காணொலிகளை வெளியிடும் செயல்பாடுகளில் இவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

பிட்டகோட்டே, ராஜகிரிய, கண்டி, பிலியந்தலை மற்றும் கம்பஹா பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 23 முதல் 39 வயதிற்கு உட்பட்ட 4 பேர் உள்ளடங்கியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுபோன்ற சம்பவங்களுக்கு எதிராக தண்டனைச் சட்டம் மற்றும் ஆபாச வெளியீட்டுச் சட்டத்தின் கீழ் பொலிஸ் கணினி குற்றப்பிரிவு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று பேச்சாளர் எச்சரித்துள்ளார்.

# 30 வயதுக்கு மேற்பட்ட 45 ஆயிரம் பேருக்கு கொவிட் தடுப்பூசிகள் வழங்க நடவடிக்கை

## வவுனியா மாவட்ட சுகாதாரப்பிரிவு தெரிவிப்பு

வவுனியா மாவட்டத்தில் 30 வயதிற்கு மேற்பட்ட 45 ஆயிரம் பேருக்கு பைஸர் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த வாரம் 60 வயதுக்கு மேற்பட்ட 1,000 பேருக்கு முதல் கட்டமாக சினோபோர்ம் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

அதன் இரண்டாம் கட்டமாக சில தினங்களில் 30 வயதுக்கு மேற்பட்ட 45,000 பேருக்கு பைஸர் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சுகாதாரப் பிரிவினர் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் அரசாங்கம் மக்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

அதன் அடிப்படையில் வவுனியா மாவட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வன்னி இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜென்ரல் கேமந்த பண்டாரவின் முயற்சியால், வவுனியா சுகாதாரத் துறையினரின் ஒத்துழைப்புடன் இவ்வாரம் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பைஸர் தடுப்பூசிகள் வவுனியா மாவட்டத்துக்கு எடுத்து வருவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதில் முதன்மை அடிப்படையில் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்குவதற்கு ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையுடன், தடுப்பூசி வழங்குவதற்கான நிலையங்கள் மற்றும் திகதிகள் என்பன பின்னர் அறிவிக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# நீராவியடிப் பிள்ளையார் ஆலய பொங்கல் உற்சவம் நேற்று

முல்லைத்தீவு - பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை ஆரம்பமாகி நடைபெற்றது.

இதன்போது பாரம்பரிய முறைப்படி கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்திலிருந்து மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு உற்சவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆலய வளாகத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை 3 மணியளவில் கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளை தொடர்ந்து அங்கிருந்து மடப்பண்டம் எடுத்து வரப்பட்டு பொங்கல் உற்சவம் ஆரம்பிக்கப்பட்டது. இதேவேளை கடந்த 9ஆம் திகதி பிரதேச செயலகத்தால் குறித்த உற்சவத்தில் 10 பேர் மாத்திரமே கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


**வீட்டுப் பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் கச்சேரிக்கு அருகாமையில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய பணிப் பெண் தேவை. வயது 20 - 40 விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு - 0782736950**








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2021 இல் வெளியிடப்பெற்றது.




இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 50ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**491. தமிழ் சினிமாவில் மக்கள் செல்வன் என அழைக்கப்படுபவர் யார்?**

**492. 2, 4, 10, 20, 34, .......... என்ற எண் தொடரில் அடுத்துவரும் இரு எண்களும் எவை?**

**493. இலங்கை கிரிக்கெட் அணி எத்தனை தடவை ரி - 20 உலகக் கோப்பையை கைப்பற்றியுள்ளது.**

**494. யானையின் ஆணுக்கு வழங்கப்படும் பெயர் யாது?**

**495. ஆவர்த்தன அட்டவணையில் விழுமிய வாயுக்கள் என அழைக்கப்படும் கூட்டம் யாது?**

**496. இறுதியாக நடைபெற்ற விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் மகளிர் கிண்ணத்தை கைப்பற்றியவர் யார்?**

**497. இறுதியாக நடைபெற்ற கோபா அமெரிக தங்கக் காலணியை பெற்றவர் யார்?**

**498. விசையின் சர்வதேச அலகு எது?**

**499. மணிமேகலையின் தாயின் பெயர் யாது?**

**500. உலக நடையறிந்து ஒழுகுதல் எவ்வாறு அழைக்கப்படும்?**

பெயர் :- ................................................ அடையாள அட்டை:- ................................
முகவரி :- ................................................ மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ............................

## 48ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**471. ஆர்ஜென்டினா**
**472. பிள்ளை**
**473. கார மண் உலோகங்கள்**
**474. 36, 48**
**475. குளுக்கோஸ்**
**476. ஜோசப் ஸ்டாலின்**
**477. 05**
**478. இலங்கை**
**479. ஏழாலை**
**480. 0**

## 12ஆம் திகதி வெளியான 48ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1.எஸ். சதுர்ஜினி - அல்வாய் (9 சரி)
2. ஜெ.வினோஜன் - குடத்தனை (9சரி)
3.யு.ஜாமளை - கொழும்பு (9சரி)
4.ஐ. கார்த்திகன் - யாழ்ப்பாணம் (08சரி)
5.எஸ்.துவாரகா - மட்டக்களப்பு (08சரி)
6. ஆர். மாலதி - உடுப்பிட்டி (8 சரி)
7. பி.ஸ்ருதி - மட்டக்களப்பு (7 சரி)
8.கே. அனுஷன் - ஏழாலை (10 சரி)
9.எச்.ரிஸ்மியா - தெல்தொட்டை (7 சரி)
10.கே.ஶ்ரீதரன் - கொழும்பு (8 சரி)
11.எம்.வர்ஷா - தெஹிவளை (6சரி)
12. ஏ.துஷான் - நீர்வேலி (7சரி)
13. எம்.வர்ணபாலன் யாழ்ப்பாணம் (9 சரி)
14. செ. ஶ்ரீஇராமச்சந்திரன் (8 சரி)

# பெண்களை வலுவூட்ட அமெரிக்கா நிதியுதவி

சிறு வர்த்தகங்களுக்கு உதவியளிப்பதற்கும் இலங்கை பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கும் 15 கோடி அமெரிக்க டொலர்களை ஐக்கிய அமெரிக்கா வழங்கியுள்ளது.

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தால் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப்பரவல் ஏற்படுத்திய பொருளாதார சவால்களைச் சமாளிப்பதற்கு, இலங்கையிலுள்ள சிறு வர்த்தகங்கள் முயலும் இவ்வேளையில் அவற்றுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவியளித்து வருவதாக, குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், உள்ளூர் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறையை முன்னேற்றுவதற்கும், தனியார் துறை முதலீட்டை வலுப்படுத்துவதற்கும், பெண் தொழில் முனைவோருக்கு உதவியளிப்பதற்கும் இலங்கையில் டீஎவ்ஸிஸி வங்கிக்கு 15 கோடி அமெரிக்க டொலர் நிதியை வழங்கியுள்ளது.

இக்கடனின் ஒரு பகுதி, இலங்கை பெண்களுக்குச் சொந்தமான அல்லது அவர்களது தலைமையிலான சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படவுள்ளன. இது குறித்து இலங்கை, மாலைதீவுக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி.டெப்லிட்ஸ் தெரிவிக்கையில் –

'பொருளாதார ரீதியாக வலிமையடைந்த பெண்கள் தங்களை மேம்படுத்துவதோடு, குடும்பங்கள், சமூகங்கள், நாடுகளையும் மாற்றுகிறார்கள் எனத் தெரிவித்தார்.

# ஒரு லட்சத்து 90 ஆயிரம் பேருக்கு ஒரே நாளில் கொரோனாத் தடுப்பூசி

நாட்டில் இதுவரை 41 லட்சத்து 78 ஆயிரத்து 737 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாகத் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த திங்கட்கிழமை மாத்திரம் ஒரு லட்சத்து 73 ஆயிரத்து 988 பேருக்கு சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

மேலும், சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் கடந்த திங்கட்கிழமை 40 ஆயிரத்து 276 பேருக்கு போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 3 லட்சத்து 85 ஆயிரத்து 849 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அத்துடன் திங்கட்கிழமை 13,357 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்ட நிலையில் இதுவரை ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 801 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் 14 ஆயிரத்து 464 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அதேபோல், நேற்றைய தினம் நாட்டில் 4,725 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதல் டோஸ் போடப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை 23 ஆயிரத்து 73 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதல் டோஸ் போடப்பட்டுள்ளது. இதேவேளை, இலங்கையில் அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டுள்ள சீனப் பிரஜைகள் 2 ஆயிரத்து 865 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதுடன் 2ஆயிரத்து 435 பேருக்கு இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் 16 பேருக்கு பதவி உயர்வு வழங்கல்

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் 16 பேருக்கு பொலிஸ் அத்தியட்சகர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச சேவை ஆணைக்குழு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியின் கீழ் இந்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.